# ஸ்டார் புது நாவல்

ரூ.10/-



# காதல் முடிச்சு



பட்டுக்கோட்டை
பிரபாகர்




# பட்டுக்கோட்டை

## பிரபாகர்




அம்பிகா குளித்து முடித்து பாத்ரூமுக் குள்ளேயே தரையின் ஈரத்தில் புடவை முனை பட்டுவிடாமல் லாவகமாகக் கட்டிக்

கொண்டு, கவரில் ஒட்ட வைத்திருந்த பொட்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

துவைக்கும் கல்லில் அமர்ந்து கால்களை ஆட்டிக் கொண்டே பல் விளக்கிக் கொண்டிருந்த அண்ணன் சேகர் குதித்திறங்கி, துப்பி விட்டு, "சரியா முக்கால் மணி நேரமாச்சு நீ உள்ளே போயி" என்றான்.

"வெள்ளிக்கிழமை. தலைக்கு குளிச்சேன்."

"யார் வேணாங்கறா? நான் ஆபீஸ் போனதும் உக்காந்து குளியேன் ஒருமணி நேரம். வீட்ல சும்மா உக்காந்திருக்கிற உனக்கு என்ன அவசரம்?"

நடந்து கொண்டிருந்தவள் நின்று திரும்பி தன் அண்ணனை லேசான முறைப்புடன் பார்த்த அம்பிகா, "நான் ஒண்ணும் வீட்ல சும்மா உக்காந்திருக்கலை. நானும் லைப்ரரி போகணும்" என்றாள்.

"ஆமாம்! லைப்ரரில அட்டென்ஸ் எடுக்கறாளா?" என்று கூறிவிட்டு பாத்ரூமுக்குள் நுழைந்தான் சேகர்.

அம்பிகா தலைவாரி, பின்னலிட்டு உதிர்ந்த கேசங்களைச் சுருட்டி குப்பைக் கூடையில் போட்டு விட்டு ஊஞ்சலில் அமர்ந்து ஒற்றைக் கால் மடக்கி, ஒற்றைக்கால் தொங்க விட்டுக் கொண்டு ஹிண்டு படித்துக் கொண்டிருந்த அப்பாவிடம் வந்தாள்.

அவர் நிமிர்ந்து பார்த்து, "சாப்டியா?" என்றார்.

அவர் மடியில் வைத்திருந்த விவிதபாரதி



சொட்டு நீலம் விளம்பர சொல்லிக் கொண்டிருந்தது.

"நீங்க ரேடியோ கேக்கறீங்களா. பேப்பர் படிக்கிறீங்களா?"

"ரெண்டும்" என்று புன்னகைத்தார்.

"ஆக வீட்ல உங்களைச் சுத்தி என்ன ரகளை நடந்தாலும் காதில விழாது. இல்லைன்னா காதில விழக் கூடாதுன்னு இந்த நாடகமா?" என்றாள் கைகளைக் கட்டிக் கொண்டு.

"சேகர் அப்படி என்ன சொல்லிட்டான் அம்பிகா?" என்றார் ரேடியோவின் சத்தத்தைக் குறைத்து, பேப்பரை மடக்கி வைத்து.

"கேட்டுச்சா? சொல்றாங்க. நான் வீட்ல சும்மா உக்காந்திருக்கேனா?"

"அவனுக்கு ஆபீஸ் போற அவசரம் அம்பிகா."

"இல்லைப்பா, வேலைக்கு போற அதிகாரம்."

"ஷ்! மெதுவாப் பேசு. வித்யா காதில விழப்போகுது."

"விழட்டுமே. எனக்கென்ன பயமா? பேச உரிமை இல்லையா? தொட்டதுக் கெல்லாம் அண்ணன் குத்தம் கண்டுபிடிக்குது. எப்பப் பார்த்தாலும் சுருக், சுருக்குன்னு எதாச்சும் சொல்லிக்கிட்டே இருக்குது. நீங்க ரிடையர் ஆறதுக்கு முன்னாடி இந்த நிமிர் பேச்செல்லாம் இல்லை. ஹி ஈஸ் த ஒன்லி ஏர்னிங் மெம்பர்ங்கிற மமதை!

"ஒரு வார்த்தை சொன்னதுக்கு நீ

ரொம்பதான் டென்ஷனாகறேம்மா."

"அந்த ஒரு வார்த்தையில ஓராயிரம் அர்த்தம் இருக்குப்பா. உங்களுக்கு தெரியாது இல்லைன்னா தெரியாத மாதிரி நடிப்பீங்க."

"இப்ப என்ன செய்யணும்னு சொல்றே?"

"உங்க கம்பெனி முதலாளி வீட்டுக்குப் போகலாம். நானும் கூட வர்றேன். எனக்கொரு வேலை தரச் சொல்லுங்க."

"இதை நீ பல தடவை சொல்லிட்டே அம்பிகா."

"பல தடவை சொல்லியும் நீங்க காதில வாங்கிக்கலே இல்லை."

"நான் தயங்கறதுக்கு காரணம் இருக்குப்பா."

"என்ன?"

"ரிடையர் கொடுக்கிறது ஒரு சகஜமான, எங்கேயும் நடக்கிற விஷயம்னாலும் முப்பத்தஞ்சு வருஷம் வேலை பார்த்த ஒருத்தனை திமிர்னு ஒருநாள் 'இனிமே வராதேய்யா'ன்னு சொல்றது - ஒரு விதமான அவமானம்மா. ஒரு மாதிரி மனசு நொந்து போய்டும். அதுக்கப்புறம் சின்னச் சின்ன ஏமாற்றங்கள் கூட பெரிசா வலிக்கும். நான் யூனியன்ல தீவிரமா இருந்தவன். எனக்கும் முதலாளிக்கும் எப்பவுமே ஒத்து வராது. இப்ப நான் பல்லிளிச்சிக் கிட்டுப்போய் நின்னா... நிச்சயம் காரியம் ஆகாது. எதார்க்கம் குத்தலா சொல்வான். நீ வேற கம்பெனிகள்ல முயற்சி பண்ணு. நான் வேணாங்கலை."

"அது மாசமா முயற்சி பண்ணிக்கிட்டு



தானேப்பா இருக்கேன். சும்மா படிக்கிறதுக் காகதான் நான் லைப்ரரி போறேன்னு நினைச்சீங்களா? அதுதான் என்னோட வேலை தேடும் ப்ராஜெக்ட்டுக் கான ஆபீஸ். தினம் நாலு அப்ளிகேஷன்ஸ் போஸ்ட் பண்ணிக் கிட்டுத்தான் இருக்கேன்."

சமையலறையில் இருந்து வித்யா வந்து, "டிபன் சாப்பிட வர்றீங்களா மாமா?" என்றாள். திரும்பி, "நீயும் எடுத்துக்கயேன் அம்பிகா. இட்லி சூடா இருக்கு."

தலையைத் துவட்டிக் கொண்டே தன் அறைக்கு நடந்து சேகர் ஹாலை கடந்த போது அம்பிகா சொன்னாள் "ஆபீசுக்குப் போகறவங்களுக்கு முதல்ல வைங்க அண்ணி. நான் வீட்ல சும்மா இருக்கிறவந்தானே. மெதுவா சாப்பிட்டுக்கறேன்."

அப்பா ரேடியோவின் சத்தத்தை பெரிது பண்ணி கொண்டார்.




அந்தக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தவர்களின் நிழல்களை மாலை வெயில் நீளமாக்கி இருந்தது.

ஆண்டு விழா, விளையாட்டுப் போட்டி

களின் போத தேவைப்படுகிற பார்வையாளர்களுக்கான படிப்படிகளாய் கொண்ட சிமெண்ட் கேலரியின் மேல் படியில் அம்பிகாவையும், முரளியையும் தவிர வேறு யாருமே இல்லை.

கிரிக்கெட் விளையாட்டின் கூச்சல்கள் அங்கே ஓசை குறைந்து கேட்டுக் கொண்டிருக்க, வளைந்து அந்த கேலரி முழுக்க மகிழம் பூக்களை சிந்தி வைத்திருந்த மரத்தில் கூடு திரும்பிய பறவைகள் குதூகலித்துக் கொண்டிருந்தன.

முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்த அம்பிகா பேட்ஸ்மேன் அடித்த பந்தின் வேகமான ஓட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மோட்டார் பைக்கின் சாவியை ஒற்றை விரலில் சுழற்றிக் கொண்டு வெள்ளைப் பேண்டுக்காக கர்சீப் விரித்து அமர்ந்திருந்த முரளியின் சட்டைப் பாக்கெட்டில் ஒரு காதை வெளியே நீட்டிக் கொண்டிருந்தது அவனது கூலிங்கிளாஸ். அருகில் வைத்திருந்த பிரீஃப் கேசில் எல்.ஐ.சி.யின் விளம்பர ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது.

"இன்றைய செய்திகள் இவ்வளவு தானா?" என்றான் முரளி.

"ஸ்கோர் என்னா இருக்கா முரளி?" என்றாள் கிரிக்கெட் பார்த்துக் கொண்டே.

"நீ கொஞ்சம் ஓவர் சென்சிடிவ். அதான் பிரச்சனை."

"எங்கண்ணன் சொன்னது சரின்னு சொல்றீங்களா?"



"அதுக்கு உன்னோட ரியாக்ஷன் அறிஞ்சுக்க சொல்றேன்."

"பதில் பேசியிருக்கக் கூடாது. அப்பாக்கிட்டே சொல்லியிருக்கக் கூடாது. ஒரு அசட்டு சிரிப்பு சிரிச்சுக்கிட்டு மௌனமா இருந்திருக்கணும். அப்படித்தானே?"

"ஏன் இப்படி படபடக்கறே?"

"முரளி, எனக்கு சில சமயம் உங்க மேல அசாத்தியமான கோபம் வரும். இப்ப வருது."

"எதுக்கு?"

"இந்த நிதானமே முதல்ல எனக்கு எரிச்சலைத் தருது முரளி. உணர்ச்சிகளை ரொம்ப பேர் மதிக்கிறதில்லை முரளி. அப்படிப்பட்டவங்களுக்கு எல்லாமே சாதாரண விஷயம்தான்."

"அப்படியா?" என்று சிரித்தான்.

"சிரிக்காதீங்க. எனக்கு எரியுது. என் காதலனையும் சேர்த்து எல்லா ஆம்பளைங்களும் ஒரே ரகம் தான்."

"எதில?"

"பொம்பளைங்களை அடக்கி ஆள நினைக்கிறதில."

"அம்பிகா எனக்கு வாதம் பண்ணத் தெரியாது. மனசில இருக்கறதை வார்த்தைல கொண்டு வரத் தெரியாது. இதில் எல்லாம் நான் வீக். ஆனா, ஒண்ணு நிச்சயமா புரியுது, நீ எல்லாவற்றையும் மிகைப்படுத்திப் பார்க்கறே."

"அதாவது ராங்கிக்காரி நான்."

"ஏய், நான் சொன்னேனா அப்படி, நீயா சொல்லிக்கிட்டு என்னை முறைச்சா என்ன

அர்த்தம்?"

"ஒருவேலை வேணும்ப்பா."

"கிடைச்சுடும். அதான் விடாம ட்ரை பண்றியே. நானும் பல பேர்கிட்ட சொல்லி வச்சிருக்கேன். சரி, வேலை கிடைச்சிடுச்சின்னா?"

"என்னோட ஈகோவை ஸ்தாபிக்க முடியும் வீட்ல என்னோட தன்மானம், சுய கௌரவம் இதுக்கெல்லாம் அர்த்தம் கிடைக்கும். என் அண்ணனோட திமிருக்கு மண்டைல நச்சுன்னு அடி விழும்."

"உங்க அண்ணனை ஏன் ஒரு எதிரி மாதிரி ட்ரீட் பண்றே அம்பிகா?"

"எதிரின்னு சொல்ல மாட்டேன். ஆனா கொஞ்ச நாளா மனசுவிட்டுப் போச்சு. நீ மட்டும்தான் குடும்பத்தை காப்பாத்த முடியுமா, என்னாலயும் முடியும்னு நிரூபிக்கலாம்னு ஒரு வெறி."

"சரி. உனக்கு வேலை கிடைச்சாச்சு. எத்தனை நாளைக்கு உங்கப்பாவை காப்பாத்துவே அம்பிகா?"

"என் வாழ்நாள் முழுக்க."

"பிராக்டிகலா நடக்கற காரியமா? உனக்கு கல்யாணமானதும் என் வீட்டுக்கு வந்துடுவே, அதுக்கப்புறம்?"

"அதுக்கப்புறமும் நான் வேலைக்குப் போவேன். சம்பளத்தில் அவருக்கு பணம் கொடுப்பேன்."

"அதை அவர் வாங்கிக்குவாரா மாட்டாராங்கிறது வேற டாபிக். அதை



விட்டுவோம். ஆனா, பணம் மட்டும் தான் பிரதானமிப்பா? அவருக்கு பக்கத்தில இருந்து பணிவிடை செய்றதும், ஆதரவா இருக்கிறதும் உன்னால முடியுமா? கடைசி வரைக்கும் துணையா இருக்கப் போறது உங்கண்ணன்தான். அதனாலதான் உங்கப்பா உங்கண்ணனை அனுசரிச்சிப் போறார்."

"அதுக்காக நானும் அனுசரிக்கணுமா?"

"அனுசரிச்சிப் போறதுங்கறது பணிஞ்சு போறதில்லை. ஒருத்தரை ஒருத்தர் காயப்படுத்திக்காம இருக்க முடியும் அம்பிகா, யாராச்சும் ஒருத்தர் விட்டுக் கொடுக்க ஆரம்பிச்சாப் போதும், அது ஏன் நீயா இருக்கக் கூடாது?"

"அட்வைஸ் பண்றது சுலபம். அவஸ்தை அவங்கவங்களுக்குத்தான் தெரியும்."

"ஓக்கே. லெட் அஸ்நாட் ஸ்பாயில் அவர் ஈவ்னிங் மூட், நோ மோர் ஆர்குமெண்ட்ஸ்" என்று இரண்டுகைகளையும் தூக்கினான் முரளி.

சற்று நேரம் இரண்டு பேரும் மௌனமாக கிரிக்கெட் பார்த்தார்கள்.

தன் தலைமேல் உதிர்ந்த பூவைத் தட்டி விட்டுவிட்டு, "அம்பிகா" என்றான் முரளி.

"ம்?"

"சில சமயங்களில் என் மேல கோபம் வரும்னு சொன்னியே, எந்தெந்த சமயம்?"

"வேணாம், ஈவ்னிங் மூடை கெடுத்துக்க வேணாம். ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன். உங்களுக்கு கீதமாலினி தெரியுமா?"

"ஹோட்டலா?"

"நடிகை. இப்ப வந்துக்கிட்டிருக்கே 'ராகங்கள் பதினாறு' டி.வி.சீரியல் அதில ஹீரோயின் என் ஃப்ரெண்ட். ஏழு வாரமாச்சு. பத்திரிகைல எல்லாம் பேர் வந்தாச்சு. டாக் ஆஃப் தி சிடி. தெரியாதுன்னு சொல்றீங்களே..."

"என்னம்மா இது வம்பாப் போச்சு. ஒரு ஆளைத் தெரியாம இருக்கிறது தப்பா?"

"இந்த டி.வி.சீரியல் பத்தி ஏற்கனவே பாராட்டு உங்ககிட்டே சொன்னதா ஞாபகம்."

"ஆமாம், சொன்னே."

"ஒவ்வொரு திங்கட் கிழமையும் தவறாமல் பாருங்க முரளி. நாம டிஸ்கஸ் பண்ணலாம்னு கூட சொன்னேன்."

"ஆமாம். சொன்னே. ஆனா எனக்கு நேரமே இல்லைம்மா. ஒரு எல்.ஐ.சி. டெவலப்மெண்ட் ஆபீசருக்கு மத்தவங்க ஓய்வா இருக்கிற நேரத்திலதான் வேலையே துவங்குது. பாலிசி எடுக்கிறவங்க அதிகாலைல வரச் சொல்வாங்க. ஈவினிங்ல வரச் சொல்வாங்க. அவங்க சொல்ற நேரத்தில போயாகணும். யு நோ இட்."

"இந்தக் கதையெல்லாம் வேணாம். எந்த வேலை எப்படிப் போனாலும் மகாபாரதம் மட்டும் விடாம பார்க்கிறீங்களே.."

"அதில எனக்கு அதிகப்படியான இன்ட்ரெஸ்ட்னு அர்த்தம்."

"நாட்ல இன்னைக்கு யுத்தமா, நாளைக்கு யுத்தமான்னு அபாயமான சூழ்நிலை இருக்கிறப்ப, புராண காலத்தில நடந்த



யுத்தத்தை எப்படித்தான் கோடிக் கணக்கான பேர் உக்கார்ந்து பார்க்கறாங்களோ."

"அம்பிகா உன் கருத்தை எல்லோர் மேலயும் திணிக்கிறது தப்பு. எல்லைல நாளைக்கே போர் ஆரம்பிக்குதுன்னா நீ துப்பாக்கி எடுத்துக்கிட்டு போய் நிக்கப் போறியா? என்ன? கீசீம் பண்ணுவே. பரபரப்பா நியூஸ் படிச்சி செத்தவங்களுக்காக கவலைப்படுவே. வாட் எல்ஸ்? அதுக்காக அவங்கவங்க மனசுக்குப் பிடிச்சபடி நடக்கிறதை இன்டர்ஃபியர் செய்றது நியாயமா?"

"நான் இன்டல் செய்யலை. அதை விடுங்க. நான் சொன்ன சீரியலை கொஞ்சம் என்ஜாய் பண்ணி பார்க்கலாமில்ல?"

"அம்பிகா, டி.வி.ல நான் நியூசும், மகாபாரதமும் மட்டும்தான் பார்க்கறேன். சினிமா, ஒளியும் ஒலியும் இதெல்லாம் கூட சினிமா. பார்க்கிறதில்லை. எனக்கு பொதுவா சினிமா, டிராமாக்கள்ல இன்ட்ரெஸ்ட் கிடையாதுன்னு உனக்குத்தான் தெரியுமே."

"வேற எதுலதான் இன்ட்ரெஸ்ட்?"

"உன்னை லவ் பண்றதில்" என்று அவன் தாவடையைப் பிடித்த அவன் கையை வெடுக்கென்று தட்டிவிட்டு திரும்பி அமர்ந்து கொண்டாள் அம்பிகா.

"அம்பிகா" என்றான்.

அவன் பக்கம் திரும்பவில்லை.

"ஏய்... எதுக்கா இப்படி அனாவசியத் துக்கு எல்லாம் கோபப்படறே?"

அதற்கு பதில் சொல்லவில்லை.

"ஓக்கே, நானும் இந்தப் பக்கம் திரும்பிவிட்டு சாமியார் மாதிரி மௌனமாய்டவா?"

தன் கைப்பையை எடுத்த தோளில் மாட்டிக் கொண்டு எழுந்து கொண்ட அம்பிகா, "நான் வீட்டுக்குப் போறேன்" என்று படிகளிறங்கத் துவங்கினாள்.

"ஏய்! நில்லும்மா. இப்பத்தான் வந்தோம். சரி. உன்னை பஸ் ஸ்டாப்ல விட்டுட்டாவது போறேன்."

"எனக்கு பஸ் ஸ்டாப்புக்கு வழி தெரியும்."

பட்டென்று சொல்லிவிட்டு வேகமாகப் போன அம்பிகாவைப் பார்த்த முரளி பெருமூச்சு விட்டுக் கொண்டு சூட்கேஸுடன் தன் பைக்கிற்குச் சென்றான்.




அந்த ஜனமூத்தோர் தொலைபேசி பூத்தில் தன் முறைக்காக மூன்றாவது நபராக அம்பிகா காத்திருந்தாள். இவளுக்கு முன்னால் நின்றவன் ஊதிய சிகரெட் புகை நேராக இவள் முகத்தில் வந்து மோதியது.

வேகமாக இருமிவிட்டு, கைக்குட்டையால் புகையைக் கலைத்து விட்டாள். நாகரீகம் தெரியாத இடியட்ஸ்! ஒரு நச்சுப் புகையை சுவாசிக்க உனக்கு உரிமை இருக்கலாம். அந்த புகையை வலுக்கட்டாயமாக மற்றவர்களை சுவாசிக்க வைக்க உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உரிமை இல்லாமல் வீட்டுக்குள் புகுந்தால் மட்டும்தான் ட்ரெஸ்பாஸா? இதுவும் ஒரு ட்ரெஸ்பாஸ். அத்து மீறல். அருவருப்பான செய்கை.

அம்பிகா எரிச்சலை அடக்கிக் கொண்டாள். அருகே சக்கர வண்டியில் கறுப்பு திராட்சையில் ஆயிரம் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்க, ஸ்டூல் போட்டமர்ந்த கடைக்காரன் எடைக்கு வாங்கின புத்தகம் புரட்டி சினிமா ஸ்டில்களாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தன் முறை வந்ததும், எண் சுழற்றி தொடர்பு கிடைத்ததும் தனி பகுதி வந்து கதவு சாத்திக் கொண்டு "நான் அம்பிகா பேசறேன்" என்றாள்.

"தெரியுது. சொல்லு" என்றான் முரளி.

"கோபமா என் மேல?"

"சேச்சே."

"பொய். உங்களுக்கு என் மேல கோபம்."

"இல்லை அம்பிகா, கோபம் இல்லை."

"தேத்து நான் படபடப்பா வெடுக்குன்னு புறப்பட்டு வந்திருக்கக் கூடாது முரளி"

"அப்படியா?"

"கோபம்தானே!"

"இல்லை, கவலை?"

"என்ன கவலை?"

"உன் அவசர புத்தியையும், கோபத்தையும் எப்படி குறைக்கப் போறேங்கற கவலை."

"ஸாரிம்மா. இப்பல்லாம் எனக்கு அனாவசியத்துக்கு கோபம் வருது."

"அதுவும் அசாத்தியமா"

"யெஸ். எனக்கு ஏதாச்சம் தண்டனை கொடுங்களேன் முரளி, ப்ளீஸ்_"

"சேச்சே, அம்பிகா, உன்னை நான் சரியா புரிஞ்சு வச்சிருக்கேன். பரவாயில்லை, விடு"

"ம்கூம், எனக்கு ஏதாச்சம் தண்டனை வேணுமே. ஒரு வாரத்துக்கு நான் உங்களைப் பார்க்கக் கூடாது. பேசக் கூடாது. அதான் தண்டனை. சரியா?"

"உனதாதே உனக்கு மட்டுமான தண்டனையா அது? எனக்கும் சேர்த்துச் சொல்றியே! நம்மாள ரெண்டு நாளைக்கு மேல தாக்குப்பிடிக்க முடியாது நாளைக்கு ஈவினிங் லைப்ரரி வர்றேன். அங்கேர்ந்து காலேஜ் காலரி போய்டலாம். நான் வர்றப்ப என்ன தண்டனை உனக்குத் தரலாம்னு யோசிச்சிட்டு வர்றேன். ஓக்கே?"

"சரி"

"வச்சிடட்டுமா?"

"இருங்க. இருங்க. முக்கியமான விஷயம் ஒன்னு சொல்ல மறந்துட்டேன். நேத்து அந்த ஸ்ரீதமாலினி பத்தி ஆரம்பிச்சேன். அதுக்குனே பேச்சு மாறிடுச்சி."

"ஆமாம். சொல்லு."

"ஸ்ரீதமாலினி இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எடுக்கணும்னு சொன்னா, உங்களைப் பத்தி



சொன்னேன். ஈ டெய்ல்ஸ் கேக்கணும்னா. நாளைக்கு ஈவினிங் அவளை லைப்ரரிக்கு வரச்சொல்லி நாங்க ரெண்டுபேருமா உங்களுக்காக வெய்ட் பண்றோம் சரியா?"

"அது மரியாதை இல்லை அம்பிகா. அவங்க வீட்ல எப்ப ஃப்ரீயா இருப்பாங்கன்னு கேட்டுச் சொல்லு. அவங்க வீட்ல பார்த்துப் பேசலாம்."

"அவங்க வீட்ல ஒம்போது டிக்கெட். வசதி பத்தாது. அவளே வெளில மீட் பண்ணி பேசத்தான் விரும்பறா."

"அவங்களுக்கு எந்த சங்கடமும் இல்லைன்னா சரி. எனக்கு ஒரு பிரச்சனையுமில்லை."

"அப்ப நாளைக்கு மீட் பண்றோம். கோபம் கொஞ்சம் கூட இல்லையே?"

"இருந்திருந்தாலும் இப்பப் போய்டுச்சின்னு வச்சிக்கயேன்."

"இதுதான் நேர்மையான பதில் மை டியர் ஜெண்டில்மேன்" என்று சிரித்துவைத்தான்.




பணம்கொடுத்துவிட்டு பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தவன் அருகே மெக்கானிக் ஷெட்டில் நின்ற வெள்ளை பியட்களின்

நம்பரைப் பார்த்துவிட்டு நின்றான்.

அட! இது தேமாலினியின் காராயிற்றே...

காரை நோக்கிச் சென்றதும், கடைக்குள்ளே நாற்காலியில் அமர்ந்திருந்த தேமாலினியும் இவனைப் பார்த்துவிட்டு "ஹாய் அம்பிகா!" என்று எழுந்து வந்தாள்.

"என்ன இங்கே தோ?"

"என் டிரைவர் வேலையிலேர்ந்து நின்னு நாலு நாளாச்சு. நேத்து ரிப்பேருக்குக் கொடுத்திருந்தேன். இன்னைக்குத் தர்றதா சொல்லியிருந்தாங்க. வந்தா, இன்னும் அரைமணி நேரவேலை இருக்காம். போயிட்டு மறுபடி வர்றதுக்கு பதிலா வெயிட் பண்ணி வாங்கிட்டுப் போயிடலாம்னு உக்காந்தேன். நல்லவேளை, பேச்சுத் துணைக்கு நீ வந்தே. வா, ஒரு கூல் ட்ரிங் சாப்பிட்டுக் கிட்டே பேசலாம்.

ஜிகினா எல்லாம் வைத்துத் தைத்த நீல நிற சுரிதார் அணிந்திருந்த தேமாலினி உரிமையோடு அம்பிகாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சாலையைக் கடந்து எதிரில் இருந்த ஹோட்டலுக்கு வந்தாள்.

மாடியில் குளிர் அறைக்கு வந்து அமர்ந்ததும் கேட்டாள்:

"இந்த வாரம் நாடகம் பார்த்தியா?"

"உன் நாடகத்தால எனக்கும் என் ஆளுக்கும் நேத்து பிரச்சனையே வந்துடுச்ச போடி! எவ்வளவு ப்யூட்டி ஃபுல் ட்ராமா. என்ன ஒரு ஸ்க்ரீன் ப்ளே. வாட் ஏ சப்ஜெக்ட்... ஒரு ரசனை வேணாம். பார்த்திங்களான்னு



கேட்டா நேர மில்லைன்னு நழுவிட்டு அப்புறம் இன்ட்ரெஸ்ட் இல்லைங்கறார். எனக்கு கோபம் வந்து புறப்பட்டு வந்துட்டேன்."

"அய்யய்யோ! அப்புறம்?"

"இப்பதான் கொஞ்சம் முன்னாடி போன் செஞ்சி ஸாரி சொன்னேன்."

"கோபமாயிட்டாரா?"

"ம்கூம். அதான் இல்லை. தலைல பெட்ரோல் ஊத்தி, நெருப்புக் குச்சி கிழிச்சி பக்கத்தில போனாக்கூட பதறாம சிரிச்சிக்கிட்டிருக்கிற டைப் இவர். தயாள் பேட்டி மாதிரி! எந்த உணர்ச்சியைக் கொட்டினாலும் வாங்கி வச்சிக்கிட்டு சுமுக்கமா இருப்பார். எல்லாத்துக்கும் ஒரு புத்தர் சிரிப்பு."

"எப்படிடி பின்னே அவரை லவ் பண்ணேே?"

"தட் ஈஸ் வாட் ஐம் வொண்டரிங் தோ. எப்படி இவரை காதலிச்சேன்? சொல்லத் தெரியலைம்மா. பட் ஐ லவ் ஹிம். அது நிச்சயம். ரெண்டு நாள் பார்க்கலைன்னா ஒரு மா திரியா ஆயிடறேன். எப்படியோ என்னை அசத்திப் போட்டுட்டார். இட் ஆல் ஸ்டார்ட்டட் - இன் லைப்ரரி. அது ஏன் இப்ப? உன் மேட்டர் சொல்லிட்டேன். நாளைக்கு ஈவினிங் நீ லைப்ரரி வர்றே. வி ஆர் மீட்டிங் எந்த லைப்ரரி?"

"யுனிவர்சிடி லைப்ரரிதானே? தெரியுமே அம்பிகா."

இரண்டு குளிர்பானங்கள் கொண்டு

வந்து வைத்தான் ஸ்டுவர்ட்.

"டேக் இட் ஃப்ரம் மீ, அம்பிகா. உன்னைவிட எனக்கு அதிகமான ஆம்பளைங்களோட அறிமுகம். உன் ஆளை நான் பார்த்தது கூட கிடையாது. ஆனா அட்வைஸா சொல்றேன். ஜாக்கிரதையா இரு" என்றாள் கீதா.

"என்ன ஜாக்கிரதை?"

"மேரேஜ் பண்ணிக்கிறதைப் பத்தி அவர் பேச்செடுத்திருக்காரா?"

"ஒவ்வொரு தடவையும் நான்தான் தள்ளிப் போட்டுருக்கேன்."

"ஏன்?"

"ஐ வாண்ட் எ ஜாப்! வேலை கிடைச்சதுக்கப்புறம் தான் மேரேஜ்."

"கறுக்கமா இருக்கிறவங்க டபுள் இரோத் மெய்ன் டெய்ன் பண்றவங்கன்னு படிச்சிருக்கேன். உனக்கு ஒரே ஒரு முகம் மட்டும் தெரிஞ்சிருக்கலாம். அதாவது தெரியறமாதிரி அவன் நடந்திருக்கலாம். தீர விசாரிச்சுக்கம்மா. கல்யாணத்துக்கப்புறம் எனக்குத் தெரிஞ்சி நம்ம ஃபிரெண்ட்ல நிறைய பேர் சந்தோஷமா இல்லை. பேரண்ட்ஸ் பார்த்து செய்யும் கல்யாணங்கள்ல குறைகள் இருக்கிற மாதிரி லவ் மேரேஜ்லயும் இருக்கு. காதலிக்கிற போர்வையில பெண்களை ஏமாத்தறவங்க பெருகிட்டதால சொல்றேன். தப்பா எடுத்துக்காதே. உன் ஆளு பர்ஃபெக்ட் ஜெண்டில்மேனா இருக்கலாம். ஆனா அதை கன்ஃபர்ம்டா உறுதி செஞ்சுக்கன்னு சொல்றேன்."



"எப்படி?" என்றாள் அம்பிகா.

"அது எனக்குத்தெரியலை."

"என்னை நீ குழப்பி விட்டுட்டே... கீதா" என்றாள் அம்பிகா குளிர்பானத்தைக் குடித்து முடித்து.




யுனிவர்சிட்டி லைப்ரரியின் வாசலில் இருந்த மர நிழலில் பைக்கை நிறுத்தி இறங்கினான் முரளி. கேரியரில் செருகியிருந்த ப்ரீஃப்கேசை எடுத்துக் கொண்டு மணி பார்த்தான். 5.10

லைப்ரரிக்கு உள்ளே நடந்து ரெஃபரென்ஸ் பகுதிக்கு வந்து வழக்கமாக அம்பிகா அமர்ந்திருக்கும் நாற்காலி காலியாக இருப்பதைப் பார்த்தான். அந்த ஹால் முழுவதும் பார்வையை ஓட்டிவிட்டு வெளியே வந்தான்.

சற்று நேரம் படிக்கட்டுகளில் அமர்ந்தான். அண்ணாவையும், எம்.ஜி.ஆரையும் சமாதியில் சந்திக்க டூரிஸ்ட் பஸ்கள் எதிர் சாரியில் வரிசையில் நின்றிருந்தன. வாகனங்கள் வகைவகையான சத்தங்களுடன் விரைந்து கொண்டிருந்தன. கடல் காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது.

முரளி கால் மணி நேரம் காத்திருந்து விட்டு சாலையோரத்தில் நின்ற கடலை வண்டிக்கு சென்று கடலை வாங்கிக் கொறித்துக் கொண்டு, வந்து நிற்கிற ஒவ்வொரு பல்லவனில் இருந்தும் அம்பிகாவை எதிர்பார்த்துக் காத்திருந்த போது-

அவன் அருகில் உரசி விடுவதைப் போல வந்து நின்றது அந்தக் கார். அந்த காரில் அமர்ந்திருந்த மாடர்ன் பெண் தன் கூலிங் கிளாசை தலைக்கு மேல் ஏற்றி விட்டுக்கொண்டு "எக்ஸ்யூஸ் மி" என்றாள்.

"என்ன?" என்றான் முரளி அவளருகில் குனிந்து.

அவள் ஒரு அலுவலகத்தின் விலாசம் எழுதின காகிதத்தை அவனிடம் காட்டி, "இங்கே மெரீனா பீச்சுக்கு எதிர்லன்னு சொன்னாங்க. கரெக்டா எந்த இடம்னு தெரியுமா?" என்றாள் சிரித்தபடி.

அந்த சிரிப்பு சற்று அதிகப்படி என்று அவனுக்குப்பட்டது.

முரளிக்கு அந்த விலாசம் தெரிந்திருந்ததால் விளக்கமாக அவளிடம் சொல்லி முடித்ததும், "ஒரே குழப்பமா இருக்கு சார். ப்ளீஸ், வாங்களேன். வந்து வழி காட்டுங்களேன்" என்றாள் அவள்.

"ஸாரிங்க. எனக்கு வேற வேலை இருக்கு."

திடீரென்று அவள் நேராக அவன் முகம் பார்த்து கண்ணடித்து, "எனக்கு அந்த ஆபீஸ்ல அஞ்சே நிமிஷம் தான் வேலை. அப்புறம் இன்னிக்கு பூரா ஃப்ரீதான். வாங்களேன் மிஸ்டர். எங்கயாவது ஜாலியாக சுத்தலாம்.



செலவெல்லாம் என்னது."

முரளி முகம் சுளித்தான். அவள் கொடுத்த விலாச காகிதத்தை உள்ளே எறிந்தான். "அதுக்கு வேற ஆளைப் பாரும்மா" என்று வேகமாக திரும்பி நடந்து பழையபடி லைப்ரரி கட்டடத்தின் படிகளில் அமர்ந்து ஒவ்வொரு கடலையாக சாப்பிடத் துவங்கினான்.

ச்சே! என்ன உலகம் இது! பெண்களில் இப்படியும் கூட சில வெட்கம் கெட்ட ஜென்மங்கள் இருக்கின்றனவா?

தப்பு செய்வதிலும் சம உரிமை கோரும் பெண் சுதந்திரத்தின் கொச்சைத்தனம் இதுவா? விதிவிலக்குதான் என்றாலும் இதெல்லாம் இந்தியாவிற்குப் புதியது. முற்றிலும் புதியது.

சற்று நேரத்தில் அம்பிகா வந்தாள். அவன் அருகில் அமர்ந்தாள். "ஸாரிம்மா, நான் கொஞ்சம் லேட். நீங்க ரொம்ப நேரமா வெயிட்டிங்கா?"

"அரை மணி நேரமாச்சு. எங்கே உன் ஃப்ரெண்டு?"

"ஆறு மணிக்குதான் இங்கே வர்றதா சொல்லியிருக்கா பிஸ்னஸ்லயே குறியா இருக்கிங்களே.. எங்க அந்த புக். கொண்டாந்திங்களா?"

"டூ டேட் தாண்டியாச்சுன்னு சொன்னியே. அதனால கொண்டாந்துட்டேன்" என்று தன் ப்ரீஃப்கேஸ் திறந்து அந்த ஆங்கில புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான் முரளி.

"நானும் எத்தனையோ சுயசரிதை புத்தகங்கள் படிச்சிருக்கேன் முரளி. இதை மாதிரி ஒரு வெளிப்படையை பார்த்ததில்லை. எவ்வளவு வகையான அனுபவங்கள்! எதிலயும் பொய் இல்லை. ஒரு துளி மிகையில்லை. படிச்சிங்கதானே?"

"ம்."

"என்ன ம், நான் புக்கை கொடுத்தப்ப சுவாரசியமில்லாம வாங்கிக்கிட்டிங்களே, படிச்சதும் அசந்து போயிருப்பீங்களே..."

"ம்."

"ட்ரெய்ன்ல வைக்போட போனப்ப அந்த ஃபிரெஞ்சு காரனோட ஏற்பட்ட சண்டை ரொம்ப புதுசு, இல்லே?"

"அம்பிகா, நான் அந்த புக்கைப் படிக்கலை."

"படிக்கலியா? பதினஞ்சு நாளா வாங்கி வச்சிக்கிட்டு என்ன செஞ்சிங்க?"

"நேரமே கிடைக்கலைன்னு நான் பொய் சொல்ல விரும்பலை அம்பிகா. புத்தகம் படிக்கிறதுங்கிறது ஒரு நல்ல பழக்கம்தான். ஆனா அது சின்ன வயசிலேர்ந்தே வளர்ந்திருக்கணும். எனக்கு எந்த புக்கை எடுத்தாலும் நாலாவது நிமிஷம் தூக்கம் வந்துடுது. மத்தவங்க படிச்சுச் சிலாகிச்சு சொல்றப்ப கேட்க ஆர்வமா இருக்கு. சொந்தமா படிச்சுத் தெரிஞ்சுக்க போரடிக்குது. இந்த புக்கை நானும் ஒரு பத்து தடவையாவது கைல எடுத்திருப்பேன். ரெண்டாவது பக்கம் தாண்டலை. யாராச்சும் கூப்புட மாட்டாங்களா, ஏதாச்சும் வேலை



வராதான்னு ஒரு எதிர்பார்ப்போடயே படிச்சேன். இன்வால்வ்மென்ட் இல்லாம ஒரு [illegible] செய்யமுடியாதும்மா."

அம்பிகாவின் முகம் சின்னதாயிற்று.

மௌனமாக அந்தப் புத்தகத்தை எடுத்து தன் கைப்பைக்குள் வைத்துக் கொண்டு அமைதியானாள். அவனுடைய பார்வையைத் தவிர்த்தாள்.

"அப்புறம் அம்பிகா. உன் வேலை விஷயமா என் சொந்தக்காரர் ஒருத்தர்கிட்டே சொல்லியிருக்கேன். அவர் கொஞ்சம் செல்வாக்குள்ளவர். தன்னோட ஃபிரண்டு ஒருத்தர் கம்பெனில உனக்கு சிபாரிசு பண்றதா சொல்லி இருக்கார். நாளைக்கு உன்னோட போட்டோவோட, ஒரு பயோடேட்டாவும், அப்ளிகேஷனும் எழுதி என் ஆபீசுக்குக் கொண்டாந்து கொடுக்கறியா?

"சரி. என்ன வேலை?"

"தெரியலை. உன் படிப்புக்குத் தகுந்த மாதிரி இருக்கும்."

மீண்டும் அவர்களுக்குள் அமைதி விழ, அதை மறுபடி அவன்தான் துண்டித்தான். "உனக்காக காத்துக்கிட்டிருந்தப்ப ஒரு சம்பவம் நடந்தது அம்பிகா."

"என்ன?"

"கேக்ற ஒவ்வொரு பொம்பளையும் வெக்கப்படணும்."

"என்ன பலமா பீடிகை போடறீங்க?"

"நீ வர்ற பஸ்ஸை எதிர்பார்த்துகிட்டு

பிளாட்ஃபாரத்தில நான் நின்னேனா, ஒரு கார் வந்து என் பக்கத்தில நின்னுச்சி. அதில ஒருத்தி ரொம்ப ஸ்டைலா இருந்தா, என்கிட்டே ஒரு அட்ரசுக்கு வழி விசாரிச்சா. திடீர்னு கண்ணடிச்சி வர்றிங்களா, ஜாலியா சுத்திட்டு வரலாம்னு கேட்டா எனக்கு ஒரே ஷாக். நான் எதிர்பார்க்கவே இல்லை. அதுக்கு வேற ஆளைப் பாருன்னு சொல்லி அனுப்பிச்சிட்டேன்."

"அ- அட்வான்ஸ்!" என்றாள் அம்பிகா.

"உன்கிட்டே பொய் சொல்லணும்னு எனக்கென்ன அவசியம்? நிஜமாதான் சொல்றேன் அம்பிகா. கொஞ்சம் முன்னால நடந்துச்சி."

"ஆச்சரியமா இருக்கு"

"எனக்கு அதிர்ச்சியா இருக்கு."

"ஒரு அழகான பொம்பளை கார்ல வந்து கண்ணடிச்சி கூப்பிட்டும். வேற ஆளைப் பாருன்னு இந்தக் காலத்து ஆம்பளை சொல்வானான்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு" என்று சிரித்தாள்.

"ஏய்!" என்று அவள் தலையில் செல்லமாகக் குட்டினான். "என்னை என்ன அவ்வளவு சீப்பான ஆளுன்னு நினைச்சியா?"

"காஸ்ட்லியோ?"

"படவா!" என்றவன் "எங்கே உன் ஃபிரண்டை இன்னும் காணோம்?"

"வருவா. கண்டிப்பா வருவா."

மீண்டும் அமைதி.

சற்று நேரத்தில் பாப்ட் ஹேர் காற்றில்



ஊஞ்சலாட, முழங்கால் வரை மிடி அணிந்து வந்த கீதமாலினி முக்காலடிக்கு ஹீல்ஸ் அணிந்திருந்தாள்.

அம்பிகா அவளை அறிமுகப்படுத்தி வைத்தாள். வணக்கம் சொன்ன முரளி, "ஸாரிங்க உங்க டி.வி. தொடர் நான் பார்க்கலை அதை முதல்லயே சொல்லிடறேன்" என்றான்.

"ஸோ வாட்?" என்று சிரித்த கீதா "இங்கேயே உக்காந்து பேசலாமா?" என்றாள்.

"உங்களை யாராவது அடையாளம் கண்டுபிடிச்சி தொல்லை கொடுப்பாங்க இல்லையா? எதாச்சும் ஒரு ஹோட்டல் போலாமா?"

"இல்லை சார். நான் இன்னும் அந்த அளவுக்கு பாபுலர் ஆகலை. டி.வி. நாடகத்தில கிராமப் பொண்ணு கேரக்டர். இந்த மாடர்ன் ட்ரெஸ்ல யாருக்கும் அடையாளம் புரியாது. நானா சொல்லிக்கிட்டாதான் உண்டு. இங்கே காத்து நல்லா வருதே. இங்கேயே பேசலாம்."

பிறகு முரளி இன்ஷ்யூரன்ஸ் தொடர்பாக அவள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் சொல்லி, தன் அலுவலக விலாசம் தந்து சில விளக்கக் கையேடுகளை ப்ரீஃப்கேஸில் இருந்து எடுத்து அவளிடம் கொடுத்த பிறகு- கீதமாலினி எழுந்துகொண்டாள்.

"அப்ப நான் புறப்படறேன். லவர்ஸ்க்கு நடுவே இவ்வளவு நேரம் தொந்தரவா இருந்ததே தப்பு. சொன்ன மாதிரி நாலு நாள்ல நான் ஒரு முடிவுக்கு வந்துட்டு உங்களை ஆபீஸ் நம்பர்ல காண்டாக்ட் பண்றேன்."

"ஓக்கே."




அவன் போனதும் "நம்ம பீனேகக்குப் போய்டலாமா அம்பிகா?" என்றான் முரளி.

"எனக்கு லேசா தலையை வலிக்கிற மாதிரி இருக்கு முரளி. நாளைக்கு நாம் மீட் பண்ணலாமே. புறப்படறனே" என்றாள் அம்பிகா.

"சரி. வழக்கம்போல உன்னை உன் பஸ் ஸ்டாப்ல ட்ராப் பண்ணட்டுமா, இல்லை உனக்கு வழி தெரியுமா?"

"பார்த்திங்களா, குத்திக் காட்றிங்களே. அதான் நேத்து அப்படிப் பேசினதுக்கு ஸாரி சொல்லிட்டேனில்லே?" என்றாள் முகத்தின் குறுக்கே வந்து படிந்த முடிக் கற்றையை விலக்கி விட்டுக் கொண்டு.

"அதுக்கு உண்டான தண்டனை தந்துடலாம்னுதான் நினைச்சேன். நீதான் காலிக்குப் போக வேணாங்கறியே.."

"தலை வலிக்குது முரளி சரி என்ன தண்டனை?"

"தலை வலிக்கிற இந்த மூட்ல வேணாம். நாளைக்கு நாம் எங்கே மீட் பண்றோம் அம்பிகா?"

"வழக்கம் போல இதே இடத்தில்தான்"



"வேணாம். டி.நகர்ல குமரன் சில்க்ஸ் வாசல்ல மீட் பண்ணலாம்."

"என்ன அங்கே?"

"அங்கே ஒரு சேலை எடுக்கணும்."

"யாருக்கு?"

"என்னோட வருங்கால மனைவிக்கு."

"என்னம்மா, திடீர்னு?"

"அந்தப் பொண்ணோட சர்ட்டிஃபிகேட்டை சமீபத்தில தான் நான் பார்த்தேன். அடுத்த வாரம் அந்தப் பொண்ணுக்கு பர்த்டே வருது. அதுக்கு ப்ரசன்ட் செய்யணும்."

முகம் மலர்ந்த அம்பிகா, "அதெல்லாம் ஒண்ணும் வேணாம் முரளி. எதுக்கு வீண் செலவு? நான் பர்த்டே கொண்டாடறதில்லை" என்றாள்.

"உன்னை ஆயிரம் பேருக்கு இன்விடேஷன் அனுப்பி கேக் வெட்டி பார்ட்டி கொடுத்து வீடியோ எடுத்து கொண்டாடச் சொல்லலை. நான் வாங்கித் தர்ற சேலையைக் கட்டிக்கிட்டு வா. சேர்ந்து ஒரு கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிட்டு ஹோட்டல்ல போய் சாப்பிடலாம். தட்ஸ் ஆல்."

"புதுப் புடவை யார் கொடுத்ததுன்னு வீட்ல கேட்டா?"

"உனக்கு பத்தாயிரம் பொய் சுலபமா வரும்."

"எத்தனை நாளைக்கு பொய் சொல்றது?"

"வேணாம் நாளைக்கே... இல்லை

இப்பவே உன்னோடவே உங்க வீட்டுக்கு வர்றேன். உங்கப்பா கிட்டேயும், அண்ணன் கிட்டேயும் பேசறேன்."

"மணந்தால் அம்பிகாதேவி இல்லையேல் மரண தேவின்னா?"

"நோ. இல்லைசொல்ங்கிற வார்த்தைக்கே இடமில்லை. 'நீங்க சம்மதிச்சா சத்திரத்தில கல்யாணம், சம்மதிக்கலைன்னா ரெஜிஸ்டர் ஆபீஸ்ல கல்யாணம்'னு சொல்வேன்."

"எங்கப்பாவும், அண்ணனும் சம்மதிச்சா போதுமா?"

"என் வீட்லதான் உன்னை ஏற்கனவே அறிமுகப்படுத்தி பச்சைக்கொடி காட்டியாச்சே."

"நான் அதைச் சொல்லலை. கல்யாண பொண்ணு சம்மதிக்க வேணாமா?"

"ஏன், அவளுக்கென்னவாம். இந்த மாப்பிள்ளைக்கு என்ன குறைச்சலாம்?"

"ரசனைதான் குறைச்சலாம்"

சட்டென்று மௌனமானான் முரளி.

"முரளி, சீரியஸாயிட்டிங்களா? நான் சும்மா கிண்டலுக்கு சொன்னேன். நீங்க சொன்ன மாதிரி வீட்ல சம்மதிக்கலைன் னாலும் அவங்களை எதிர்த்துக்கிட்டு உங்களோட வர்ற தைரியம் எனக்கிருக்கு. என் வாழ்க்கைத் துணையை நானே தேடிக்கிற உரிமையும், பக்குவமும் நிச்சயமா எனக்கிருக்கு. அதெல்லாம் பிரச்சனையில்லை."

"வேற என்ன பிரச்னை?"

"வேலை! எனக்கொரு வேலை



கிடைக்கணும் முரளி, என்னோட பல வருஷ கியம், கனவு, ஆதங்கம் எல்லாம் அதுதான். வேண் ஜாம் எக்கனாமிக்கலி இண்டிப்பெண் டண்ட்'. அது தர்ற சுகமே தனி, நான் யாரையும் சார்ந்து நிக்க விரும்பலை."

"புருஷன் உள்படவா?"

"யெஸ். குடும்பப் பொறுப்பில பாதி பகிர்ந்துக்கற மாதிரி குடும்ப வருமானத்திலயும் பாதி பகிர்ந்தக்கணும் முரளி. பண விஷயத்தைப் பொறுத்தவரை பெண்கள் எல்லா கட்டத்திலயும் அப்பாவையோ, கூடப் பொறந்தவனையோ, கணவனையோ சார்ந்து இருக்கிறதுதான் இந்த சமுதாய அமைப்பில ஒரு மோசமான நடைமுறை. ஒரு சாபக் கேடு. இந்த சார்ந்திருக்கிற விஷயம்தான் அவங்களை சுத்தமா மழுங்கடிச்ச தன்மான உணர்ச்சியை எல்லாம் பிடுங்கிக்கிட்டு பல் பிடுங்கின பாம்பு மாதிரியாக்கிடு அக்ரீட்?"

"ஆக பெண்கள் பாம்புகள்னு சொல்றியா?"

"ஒரு உதாரணத்துக்குச் சொன்னேன்."

"அப்ப வேலை கிடைச்சப்புறம்தான் கல்யாணம்?"

"அதுல மாற்றமே இல்லை."

"உங்க வீட்ல தெரியப்படுத்தறது?"

"அதையும் வேலை கிடைச்சதுக்கப்புறம் வச்சிக்கலாம் முரளி."

"ஓ.க்கே. ஆரம்பிச்ச இடத்துக்கு வந்துடலாம். நாளைக்கு குமரன் சில்க்ஸ் வந்துடறே. சரிதானே?"

முழங்கால்களைக் கட்டிக்கொண்டு
அவனைப் பார்த்து, "உங்களுக்கு சஸ்பென்ஸ்
பண்ணத் தெரியலை முரளி" என்றாள்.

"எப்படி?"

"புடவை எடுக்க இப்படித்தான்
என்னையும் கூப்பிடுவாங்களா? சஸ்பென்ஸா
வாங்கி திடீர்னு கொடுத்து என்னை
ஆச்சரியப்படுத்த வேணாம்?"

முரளி மௌனமாகி வேறு திசை பார்த்தான்.

"என்ன, பதிலில்லை?"

"இல்லை அம்பிகா, இப்ப
சொன்னமாதிரி உனக்கொரு இன்ப அதிர்ச்சி
கொடுக்கலாம்னுதான் நானும் நினைச்சேன்."

"பின்னே ஏன் இப்பவே 'சஸ்பென்ஸை'
உடைச்சீங்க?"

"என் ரசனைக்கு நான் செலக்ட் பண்ணி
ஒரு சேலை உனக்குப் பிடிக்காமப்
போச்சின்னா எனக்குக் கஷ்டமா இருக்கும்
அம்பிகா. அதனாலதான்."

"தட்ஸ் பாய்ண்ட். நல்ல வேளையா
சொன்னீங்க. நிச்சயமா உங்க செலக்ஷன்
கமாராதான் இருக்கும். மனசுக்குப் பிடிக்காம
ஒரு சேலையை கட்டவே முடியாது நீங்க
சொன்னதுதான் சரி. நாளைக்கு நானும்
வந்துடறேன். என் இஷ்டத்துக்கே செலக்ட்
பண்ணிக்கிறேன்."

"சரி இப்பதலை வலி எப்படி இருக்கு?"

"கொஞ்சம் குறைஞ்சிருக்கு. புறப்பட
லாம் முரளி" எழுந்து கொண்டார்கள்.






சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அம்மா கேட்டாள் "ரொம்ப கொஞ்சமா சாப்பிடுறியே முரளி?" என்று.

அருகில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த தங்கை தன் சாதத்திற்கு தயிர் எடுத்துப் போட்டு பிசைந்து கொண்டே, "ரெண்டாவது சப்பர் கம்மியாதான் சாப்பிட முடியும்மா" என்றாள் முரளியைப் பார்த்து ரகசியமாக கண்ணடித்துக் கொண்டே.

ஜக்கில் இருந்து தண்ணீரை இரண்டு பேர் டம்ளரிலும் சரித்துக் கொண்டே, "ரெண்டாவது சப்பரா?" என்றாள் ட்யூப்லைட் ஒளியில் மூக்குத்தி மின்ன.

நீட்டின காலுக்கொரு ஸ்டூல் போட்டுக் கொண்டு டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்த அப்பா திரும்பி, "புரியலையா? கவிதா சொன்னது புரியலையாடா மண்டு?" என்றார்.

"இந்த வீட்ல என்னைத் தவிர எல்லாரும் புத்திசாலிகள் தான். விவரம் சொல்லுங்களேன்" என்றாள் அம்மா.

"அதை கவிதாகிட்டேயே கேட்டுக்கோ."

"என்னடி, சொல்லேன்."

"மகூம் அண்ணன் திட்டும்."

"திட்ட மாட்டான், சொல்லு"

"வருங்கால அண்ணியோட ஹோட்ட ஓக்குப் போய் டிபன் சாப்பிட்டிருக்கும். அது முதல் சப்பர்ன்னா இது ரெண்டாவது சப்பர்தானே?"

"ஏய்!" என்று பொய்யாக கையை ஓங்கின முரளி "அதெல்லாம் ஒண்ணுமில் லைம்மா பசிக்கலை சரியா" என்றான்.

"பேச்சு வந்ததால கேக்கறேன் - எப்ப அவங்க வீட்டுக்கு முறையா பொண்ணு கேட்டு போகப் போறோம்? இதெல்லாம் தள்ளிப் போடக் கூடாது முரளி" என்றார் டி.வி. பார்ப்பதை நிறுத்தி. இவன் பக்கம் திரும்பின அப்பா.

"அவ தீவிரமா வேலை தேடிக்கிட்டிருக் காப்பா, கிடைச்சதும் கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொல்றா"

"உனக்குதான் நாலாயிரத்துக்குமேல வருதே முரளி. போதாதா? அவ வே வேலைக்குப் போகணுமா?"

"அவ வேலைக்குப் போக விரும்பறது வருமானத்துக்காக இல்லைப்பா. ஒரு சுதந்திரத்துக்காக... ஒருவித... என்ன சொல்றது அதை... அவ ஒரு டைப்."

"என்ன டைப்போ.. உனக்கு பிடிச்சருக்கு நீ வாழப் போற அவளோட... சீக்கிரம் பண்ணிக்கோன்னுதான் சொல்றேன் வேறெதுவும் சொல்லலை நான்."

"பார்க்கலாம்ப்பா."



முரளி கை கழுவிவிட்டு மாடியில் இருந்த தன் அறைக்கு வந்தான். மற்றொரு கதவைத் திறந்ததும் மொட்டை மாடி. சிவப்புச் சதுரக் கற்கள். ஜிலுஜிலுவென்று காற்று. அறைக்குள் காலண்டர்கள் புரண்டு நிமிர்ந்தன.

ஜமுக்காளமும், தலையணையும் எடுத்துக் கொண்டு மொட்டை மாடிக்கு வந்து விரித்தான். சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு குடிப்பதற்கு தண்ணீர் பாட்டில் கொண்டு வந்து அருகில் வைத்தான். டைம்பீஸில் ஐந்தரை மணிக்கு அலாரம் அடிக்க அமைத்து தலைமாட்டில் வைத்துக் கொண்டு படுத்தான்.

பாதிநிலா மேக ஓட்டையில் இருந்து மீண்டு வந்து கொண்டிருக்க, தேவலோக மனிதர்களின் தினசரி தீபாவளியின் கொண்டாட்ட நட்சத்திர மத்தாப்புக்கள் சுடர் விட்டன.

அம்பிகா!

சேலை எடுப்பது பற்றி பேசின போது-நான் எடுக்கும் டிசைன் உனக்குப் பிடிக்காமல் போகலாம் என்று நான் சொன்ன போது, உன்னிடமிருந்து வேறு பதிலை நான் எதிர் பார்த்தேன் அம்பிகா.

'முதல் முதலா நீங்க ஆசையா எடுத்துத் தர்றப்ப டிசைனா முக்கியம். சேலைதாங்க முக்கியம். அது மூலமா நீங்க காட்ற அன்புதாங்க முக்கியம். என்ன டிசைனா இருந்தா என்ன? எனக்குப் பிடிச்ச சேலைதான் கட்டணும்னு சட்டமா? உங்களுக்குப் பிடிச்ச சேலையை உங்களுக்காக நான் கட்ட

மாட்டேனா? தோ, நான் வர மாட்டேன். நீங்களே உங்க இஷ்டத்துக்கு பார்த்து வாங்கிட்டு வாங்க முரளி.'

-என்று சொல்லியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஆனால் இது கதை மாந்தர்கள் பேசும் டயலாக்கோ? நீ சொன்னதுதான் நடைமுறை யதார்த்தமோ?

அம்பிகா, நீ ஒரு குணச்சித்திரம். உன்னை உன் குறைகளோடு நான் நேசிக்கிறேன். சற்றே ஈகோ உனக்கு அதிகம். சற்றே முன் கோபம் அதிகம். சரியாகி விடும் நாளடைவில். யாரிடம் குறை இல்லை?

என்னிடம் கூடத்தான் குறைபாடு உண்டு. ஒரு இயந்திரம் போல நாட்களைக் கடத்துகிறேன். கைநிறைய சம்பாரித்தாலும் உன்னைப் போல சில விஷயங்களில் ரசனையோடு ஈடுபாடு காட்ட முடிவதில்லை.

நல்ல இலக்கியம், சங்கீதம், சினிமா, நாடகம், விளையாட்டு என்று உனக்கு அஸார்ட்டட் ரசனை. என்னவோ நான் வளர்ந்த விதமோ, என் இயற்கை குணமோ... எனக்கு எதிலுமே மனம் ஒன்றுவதில்லை.

ஆனால் உனக்கு எல்லாவற்றிலும் ஈடுபாடு இருப்பது எனக்கு சந்தோஷமாகத்தான் இருக்கிறது.

அம்பிகா, நான் உன்னை அணு அணுவாக நேசிக்கிறேன். வாழ்வில் எனக்கு உயர்பதவி, பங்களா, கார் என்று ஆயிரம் ஆசைகள் கிடையாது. ஒன்றே ஒன்றுதான்.

நீ வேண்டும்.

போதும், அது போதும். வேறெதுவும்



வேண்டாம்.

கையை உதறி முரளி சோம்பல் முறித்த போது தண்ணீர் பாட்டில் மேல்பட்டு, அது சாய்ந்து நல்ல வேளையாக உடையவில்லை.




சுவாமி படத்திற்கு முன் நின்று கண்மூடி வணங்கி, குங்குமம் எடுத்து பொட்டுக்கு கீழே கோடாக வைத்துக் கொண்டு அப்பாவிடம் வந்தாள் அம்பிகா.

"இன்டெர்வ்யூ போய்ட்டு வர்றேம்ப்பா."

"போய்ட்டு வாம்மா. பெஸ்ட் ஆஃப் லக். அண்ணி கிட்டே சொல்லிட்டுப் போ."

"சொல்லிட்டேன்ப்பா" என்று செருப்பணிந்து கொண்டாள்.

"டாத்துக்குப் போய்டும்மா. வேணும்னா ஆட்டோ பிடிச்சுக்கோ."

"நான் பார்த்துக்கறேம்பா."

அம்பிக வீட்டை விட்டுப் புறப்பட்டு தெருமுனைக்கு வர - அங்கே தன் பைக்குடன் காத்திருந்தான் முரளி கையைக் கட்டிக் கொண்டு.

"வாட் எ சர்ப்ரைஸ்!" என்றாள் அவனருகில் வந்து.

"இன்டெர்வியூ அட்டெண்ட் பண்ணப் போறே. வாழ்த்த வேணாமா நான்? அதான் வந்தேன். உக்காரு. நான் உன்னை ட்ராப் பண்ணிட்டுப் போறேன்."

யாராவது தெரிந்தவர்கள் பார்க்கிறார்களா என்று இரண்டு புறமும் பார்த்து விட்டு ஏறிக் கொண்டாள் அம்பிகா.

"அம்பிகா."

"ம்?"

"அனேகமா இந்த இன்டெர்வியூ வெறும் கண் துடைப்புதான்."

"பெரும்பாலும் எல்லா இன்டெர்வியூமே அப்படித்தான்."

"நான் என் ரிலேடிவ் மூலமா பிரஷர் கொடுத்துத் தான் உனக்கு இன்டெர்வியூ கார்டே வந்திருக்கு. அவர் நம்பிக்கையா சொல்றார். நிச்சயமா உனக்கு இந்த வேலை கிடைச்சுடும். ஆனாலும் நீ நல்லபடியா பதில் சொல்லு."

"சரிங்க."

"சேலை வாங்கினோமே, வீட்ல காட்டினியா?"

"காட்டாம எப்படி? சின்ன பொருளா ஜாக்கெட்டுக் குள்ள மறைச்சி வச்சி எடுத்துட்டுப் போக. நான் சேர்த்து வச்ச பணத்திலே வாங்கிட்டேன்னு சொன்னேன். அப்பா ஒண்ணும் சொல்லலை. அண்ணன் தான் அண்ணிக் கிட்டே என்னமோ முணுமுணுத்துக்கிட்டிருந்தான். ஐ டோன்ட் கேர்."



"ஏன் இப்படி உதறிப் பேசறே? உன் அண்ணன் தானே?"

"வேணாம். ஆரம்பிக்க வேணாம். ஐ ஹேட் ஹிம்."

"அந்த அளவுக்கு அவன் எதுவும் செய்துவிட்டதா எனக்குப் படலை."

"சில வார்த்தைகள், சைலண்ட் ரியாக்ஷன்ஸ் போதும் முரளி; என்னமோ தெரியல எனக்கு அவனை பிடிக்காம போயிடுச்சி. மறுபடியும் மனசு மாறே மாட்டேங்குது. இப்ப எதுக்கு அந்த டாபிக்?"

"ஓக்கே. நாளைக்கு உன் பர்த்டே. அந்த ப்ரோக்ராம் பத்தி பேசலாம். ஈவினிங் அஞ்சி மணிக்கு வடபழனி கோயில்ல நான் வெய்ட் பண்றேன். நீ வந்துடு. அந்த சேலையைக் கட்டிக்கிட்டு வரணும். அர்ச்சனை பண்ணிட்டு டி.நகர் வந்துடலாம். அங்கே ஏதாச்சும் ஹோட்டல்ல டிபன் சாப்பிடலாம் ஓக்கே?"

"ஓக்கே."

"அநேகமா உனக்கு வேலை கிடைச்சதுக்கும் சேர்த்து டபுள் பார்ட்டியா தரப் போற நீ."

"உங்க வார்த்தை பலிக்கிதான்னு பார்க்கலாம்."

"என் வார்த்தைய விட என் ரிலேடிவ் வார்த்தை பலிக்கும்ன்னு நிச்சயமா நம்பறதாலதான் இவ்வளவு உறுதியா நான் சொல்றேன்."

"பார்ப்போமே."

"என் ஆபீசுக்கு போன் பண்ணு."

அம்பிகாவை ஜெமினி ஃப்ளை ஓவர் அருகில் நுங்கம் பாக்கம் செல்லும் சாலையில் அமைந்திருந்த அந்த தனியார் நிறுவனத்தின் அலுவலகக் கட்டிட வாசலில் இறக்கி விட்டு விட்டு, ஆல் தி பெஸ்ட் சொல்லிப் புறப்பட்டான் முரளி.

***

**நா**ன்காவது மாடியில் இருந்த அலுவலகத்திற்கு லிஃப்டில் வந்தபோது அருகில் நின்றவன் போட்டிருந்த செண்ட் மிகையாய் மூக்கைத் தாக்கியது.

கிரானைட் கற்கள் பதித்து அதன்மேல் கோல்ட் லெட்டரிங்கில் கம்பெனி பெயர் தாங்கிய ரிஸப்ஷன் பகுதியில் போடப்பட்டிருந்த பாலிமர் கலர் நாற்காலியில் எட்டு, ஒன்பது பேர்கள் இருந்தார்கள். இவளைத் தவிர இரு பெண்களும் சுரிதார் அணிந்து மடியில் ஃபைல் வைத்திருந்தார்கள்.

அம்பிகா அமர்ந்து பின்னலை எடுத்து முன்னால் போட்டுக் கொண்டு பிரிந்திருந்த முனையை மட்டும் மீண்டும் பின்னிக் கொண்டு பின்னால் விசிறிக் கொண்டாள்.

மூன்று காலியிடங்களுக்கு இன்டர்வ்யூவிற்கு வர அழைக்கப்பட்டிருந்தவர்கள் பதினாறு பேர் என்று பேசிக் கொண்டார்கள்.

பத்து மணி என்று கார்டில் போடப்பட்டிருந்த இன்டெர்வ்யூ பதினொன்று முப்பத்துக்குத்தான் துவங்கியது.



இவள் பெயர் அழைக்கப்பட்டபோது மணி பன்னிரெண்டரை.

உடைகளை சரிப்படுத்திக் கொண்டு கதவு தள்ளி குளிர் அறைக்குள் வந்தாள் அம்பிகா.

இரண்டே பேர்கள் அமர்ந்திருந்தார்கள். ஒருவர் ஸபாரி சூட் போட்டு நாற்காலி வழிய வழிய அமர்ந்திருந்தார். மற்றவன் சூட்டிங், ஷர்ட்டிங் விளம்பரத்திற்குப் போல நீட்டாக ட்ரெஸ் செய்து, டை கட்டி, பின்குத்தி, தலையைப் படியவாரி மெல்லிய பிரேமில் கண்ணாடி போட்டிருந்தான்.

அவன்தான், "ப்ளீஸ் பீ ஸீட்டட் மிஸ் அம்பிகா. ஹி இஸ் தி மேனேஜர். ஐ'ம் அஸிஸ்டெண்ட் மேனேஜர். அடிஷனல் குவாலிஃபிகேஷன்ஸ் என்ன மேடம்?" என்றான்.

அம்பிகா அமர்ந்து கொண்டு, "எல்லாத்தையும் இன்ட்ரெஸ்ட் உண்டு சார். இண்டோர், அவுட்டோர் கேம்ஸ் அத்தனையும் பிடிக்கும். ம்யூசிக் லவர். [illegible] சீடர். இன்டீரியர் டெகரேஷன், குக்கரி அஃப்கோர்ஸ். ஸ்டேஜ் ஆக்டிங்கூட காலேஜ் டேஸ்ல பண்ணியிருக்கேன்"

"ஐ ஸீ. எங்க கம்பெனியைப் பத்தி கேள்விப்பட்டிருக்கிங்களா?" என்றார் மேனேஜர் தன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு.

"யெஸ் சார். ஸியர்ஸ் தயாரிப்புல நம்பர் ஒன் ஆஃப் அவர் கன்ட்ரி, இது ரிஜினல் ஆஃபீஸோட ஒரு இணை. தயாரிப்பு பெரேஷில்."

"இந்த ரூம்ல உங்களுக்கு அபத்தம
ஏதாவது தெரியுதா?"

"யெஸ் சார்."

"என்ன அது?"

"LET US JOIN IN NON - SMOKERS CLUB ன்
ஸ்டிக்கர் ஒட்டி வச்சிட்டு, நீங்க சிகரெ
பிடிச்சிட்டிருக்கிறது ஒரு அபத்த
இன்னொன்னு சொல்றதுக்கு அனும
உண்டா?"

"ஷூட் இட்."

"நீங்க அனுப்பின இன்ட்டெர்வ்
கார்டில பத்து மணிக்கு ஆரம்பம்
போட்டுருந்திங்க. ஆனா பதினொன்றன
மணிக்கு ஆரம்பிச்சிங்க. ஒரு ரெப்யூட்ட
கம்பெனியோட ஆபீஸ்ல பங்சுவாலிடிக்
முக்கியத்துவம் தராதது ஒரு பெரிய அபத்தம
தெரியுது."

மேனேஜர் திரும்பி உதவி மேனேஜரை
பார்க்க, அவன் ஓசை வராமல் ரசித்
கைதட்டிவிட்டு, "இந்த தைரியத்தை
பாராட்டியேத் தீரணும் சார்" என்றா
திரும்பி.

"அப்பாய்ட்மெண்ட் ஆர்ட
கொடுக்கறதன் மூலமாவா?" என்று சிரித்தா
மேனேஜர். அவன் பக்கம் திரும்பினா
மெதுவாகச் சொன்னார். "கங்கிராஜு
லேஷன்ஸ்" என்று.

"நாளைக்கே ஜாய்ன் பண்ணலாம் மேட
ப்ளீஸ் வெய்ட் அண்ட் கலெக்ட் யுவர் ஆர்ட
ஜூ'ம் வசந்த்" என்று அவன் புன்னகைத்தது ப
வசீகரமாக இருந்தது.






வடபழனி கோவிலில் அதிக கூட்டமில்லாமல் இருந்தது. வெளியே நின்று காத்திருந்தான் முரளி. வருகிற பஸ் எல்லாம் அவனுக்கு தொடர்ந்து ஏமாற்றத்தையே தந்தது.

மணி ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஜெமினியில் இருந்து வடபழனிக்கு பதினைந்து நிமிடங்களில் வந்து விடலாமே. இன்றுதான் முதல் நாள் அலுவலகம் செல்கிறான். ஐந்து மணிக்கு மேல் வேலை எதுவும் இருக்காதே.

இருள் கவியத் துவங்கி அனைத்து வாகனங்களும் விளக்கு போட்டுக் கொண்டன. கடைகளில் விளக்குகள் ஒளிரத் துவங்கின.

ஆறரை மணிவரை பார்த்துவிட்டு, பிறகு அருகில் போன் அனுமதிக்கும் கடை எதுவென்று விசாரித்து சென்று போன் செய்து பார்த்தபோது, வாட்ச்மேன் தான் பேசினான்.

"ஆபிஸ்ல யாரும் இல்லைங்களே சார். எல்லாரும் போயிட்டாங்களே."

மீண்டும் கோவில் வாசலுக்கு வந்து காத்திருந்தான். போன் பேச சென்ற சமயத்தில் வந்து உள்ளே போயிருக்கலாமோ என்று

நினைத்து உள்ளே பிரகாரமெல்லாம் சுற்றி பார்த்துவிட்டு மீண்டும் வாசலுக்கு வந்து ஏழரை மணி வரை பார்த்துவிட்டு, தன் பைக்கை ஸ்டார்ட் செய்தான் முரளி.

வீட்டிற்கு வந்து, "எனக்கு சாப்பா வேணாம்" என்று சொல்லிவிட்டு மாடிக் வந்து நாற்காலியில் அமர்ந்து கொண் கண்களை மூடிக் கொண்டான்.

அம்பிகா, ஏன், ஏன் வரவில்லை?

பிறந்த நாள் அன்று கண்டிப்பா சந்திப்பதாக எத்தனை நாளாகப் பேசி திட்டம், நேற்று உன்னை இன்ட்டெ வியூவிற்காக ட்ராப் செய்தபோது கூட சொன்னேனே. உனக்கு வேலை கிடைத்தை எனக்கு போனில் தெரிவித்தபோது கூட அ உறுதி செய்தாயே.

பிறகு ஏன் வரவில்லை!

சற்று நேரத்தில் அறைக்கத தட்டப்பட்டு, இவன் திரும்பிப் பார்க்க இவ வாங்கிக் கொடுத்த புடவையை கட்டிக் கொண்டிருந்த அம்பிகா கையில் ஒரு சிறி அட்டைப் பெட்டியுடன், "சார், ரொம் கோபமா இருக்காராக்கும்?" என்று கேட்டுக் கொண்டே வந்து ஒற்றைக் கட்டிலில் அமர்ந்தாள்.

முரளி பதில் பேசாமல் தன் ரிஸ்ட் வாட்சை எடுத்துக் காட்டினான்.

"மணி எட்டு, நான் சொன்ன நேரத்துக்கு கோவிலுக்கு வரவில்லை. தப்புத்தான். ஆனா அந்த தப்புக்கு ஒரு நியாயமான காரணம்



இருக்கலாமில்லையா? அதை நான் இப்ப சொல்லலாமில்லையா? சொன்னதுக்கப் புறமாவது ஹேப்பி பர்த் டே சொல்லலாமில்லையா?"

அவள் தலையை சாய்த்து மென்மையாகக் கேட்ட விதமே அவன் கோபத்தில் பாதியை உடனே கரைத்து விட்டது.

"இரு, விஷ் யு மெனி ஹேப்பி ரிட்டன்ஸ் ஆப் த டே சொல்லு நீயே சொல்லு. அஞ்சு மணிலேர்ந்து ஏழரை மணி வரைக்கும் வெயிட் பண்ணினா பொறுமை காலி யாயிடுமா இல்லையா?"

"ஏழு முப்பத்தஞ்சு வரைக்கும் பார்த்திருக்கக் கூடாதா? நான் கோவிலுக்கு வந்தப்ப ஏழு முப்பத்தஞ்சி, உங்களைக் காணோம், தனியா அர்ச்சனை பண்ண மனசில்லை. சும்மா கன்னத்துல போட்டுக்கிட்டு நேரா புறப்பட்டு இங்கே வந்தேன். கவிதா சொன்னா அண்ணன் கோபமா மேல போனார்ன்னு. நான் கேக் கொடுத்து சரி பண்ணிடறேன்னு சொல்லிட்டு வந்துட்டேன் ஆ காமிங்க."

கொண்டு வந்த அட்டைப் பெட்டியைத் திறந்து கேக் துண்டு ஒன்று எடுத்து அவன் வாய்க்கு கொண்டு வர, அவன் திறக்காமல், "ஏன் லேட்? முதல்ல அதைச் சொல்லு"

"எங்க ஆபீஸ்ல யார் புதுசா சேர்ந்தாலும் அன்னிக்கு ஈவினிங் ஸ்வீட், காரம், காபி வாங்கித் தரணுமாம். அதிலேயும் என்னோட சுப்பீரியர் அசிஸ்டெண்ட் மேனேஜர் இருக்காரே, அவர் என் சர்ட்டிபிகேட்

பார்த்துவிட்டு காலைலே போனதுமே ஹேப்பி பர்த்டேன்னு சொல்லி குட்டை உடை கட்டார். வெரி நைஸ் மேன். ரொம்ப கலகலப்பான டைப். அவரே என்னை ஒவ்வொரு மேஜையா அழைச்சிட்டு போய் இன்ட்ரட்யூஸ்பண்ண தோட இல்லாம இன்னிக்கு ஈவினிங் அம்பிகா நமக்கெல்லாம் பார்ட்டி கொடுப்பாங்க. நாம அவங்களுக்கு கேக் கொடுப்போம்னு அறிவிப்பு மாதிரி சொல்லி விட்டார். என்னால எதுவும் சொல்ல முடியல. ஆபீஸ் கொஞ்சம் பக்கத்தில இருந்த ஹோட்டல் போய் சாப்பிட்டோம். இந்த கேக்கைக் கொடுத்து வெட்ட சொல்லிட்டாங்க. எனக்கு தர்ம சங்கடமா போய்டுச்சி. அனா ஒண்ணும் செய்ய முடியல முடியாது. நான் போகணும்னு சொல்ல முடியுமா முரளி அதான் லேட். கோபம் தீர்ந்துச்சா. இப்ப வாயைத் திறக்கலாமா?"

முரளி மெதுவாக வாயைத் திறக்க அம்பிகா கேக்கை வைத்துக் கொண்டே "இந்தப் புடவை எங்கே வாங்கினீங்கன்னு கேக்காத ஆளே பாக்கி இல்லை. இதை செலக்ட் பண்ணப்ப உங்களுக்கு இது அவ்வளவா பிடிக்கலை இல்லை?" என்றாள்.

"அப்படி இல்லை. இதைவிட கிளிப் பச்சையில் ஒண்ணு பார்த்தமே அது ரொம்ப பிடிச்சது" என்று சகஜமானான் முரளி. "சரி நேரமாச்சி உங்க வீட்ல கவலைப்படுவாங்க வா, உன் தெருவிலே உன்னை விட்டுடறேன்" என்று பைக் சாவியை எடுத்துக் கொண்டு எழுந்தான்.






அடுத்த வாரத்தில் வசந்த் தனது புரோக்ராம்களை சொல்லிக் கொண்டே வர, அதை அம்பிகா எழுதிக் கொண்டே வர... திடீரென்று நிறுத்தி அவளைப் பார்த்தான்.

"எக்ஸ்யூஸ் மி அம்பிகா. இந்த ஹேர் ஸ்டைல் உங்க முகத்துக்கு ரொம்ப நல்ல சூட் ஆகுது. சொல்லாம இருக்க முடியலை."

"தேங்க் யூ சார்."

"நீங்களே பண்ணிக்கிட்டீங்களா இல்லை பார்லர்ல போய் பண்ணிக்கிட்டு வந்தீங்களா?"

"ஓ காட்! பியூட்டி பார்லர் போனா என்ன சார்ஜ் தெரியுமா இப்படி ஹேர் ஸ்டைல் பண்ண? நானேதான் பண்ணிக்கிட்டேன்."

"ரொம்ப பொறுமை வேணும் மேடம். முக்கால் மணி நேரமாகியிருக்குமா?"

"ம்கூம், பதினஞ்சி நிமிஷந்தான் ஆச்சு."

"ஆச்சர்யம்தான். உங்ககிட்ட உள்ள ஸ்பெஷாலிட்டியே இதுதான். எதையும் ரசனையோட செய்றீங்க. ஒரு லெட்டர் கவர்ல அட்ரஸ் எழுதினாகூட அதில ஒரு நளினம் சேர்க்கப் பார்க்கறீங்க. இந்த மாதிரி அபூர்வமா பர்ஃபெக்ஷன் பார்க்கறவங்களை எனக்கு

ரொம்ப பிடிக்கும்."

"அய்யோ! என்ன சார் ஒரு டன் ஐஸ் பார் தூக்கி தலைல வச்சிட்டுங்க. எதாச்சம் ஓவர் டைம் இருக்கா?" என்றாள் அம்பிகா சிரித்து.

"சேச்சே உண்மையை சொன்னேன். உங்களுக்கு பரிட்சார்த் நாடகங்கள்ல இன்ட்ரஸ்ட் உண்டா அம்பிகா?"

"உண்டு. ஏன் சார்?"

"இன்னிக்கு ஈவினிங் ஒரு ப்ரோக்ராம் இருக்கு. கல்கத்தாவிலேருந்து வந்திருக்கிற தமிழ் குரூப். நாடகம் நல்லா இருக்கும். 'ஆரம்பத்தில் இருந்து'ன்னு நாடகத்தோட பேர். நான் ஏற்கனவே பார்த்திருக்கேன். மறுபடி பார்க்க நினைச்சி வாங்கினேன். எனக்கு வேற ப்ரோக்ராம் வந்துடிச்சி. நீங்க யூஸ் பண்ணிக்கங்க" என்று தன் பர்சில் இருந்து இரண்டு நாடக டிக்கெட்டுகளை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

ஆர்வமாக வாங்கிக் கொண்ட அம்பிகா, "சார், இந்த நாடகத்தைப்பத்தி இந்தியா டுடேல விமர்சனம் கூட வந்தது. நான் படிச்சிருக்கேன். உடனே பார்க்கணும் மாதிரி இருந்திச்சி. ரொம்ப தேங்க்ஸ் சார்" என்றாள் குதூகலமாக.

"அப்படின்னா நீங்க ரகுவம்சன் புக்ஸ் படிக்கிற ஜாதின்னு நினைக்கிறேன்."

"ஆமாம் சார். அவர் கதைகள் ஒண்ணு விடாம படிச்சிருக்கேன். அவர் எப்படித்தான் தமிழ் நாவலும் எழுதிக்கிட்டு அதே சமயம் கவை கொஞ்சம்கூட குறையாம மலையாள நாவல்களை ட்ரான்ஸ்லேட் பண்றாரோ. பாய்



…க்கப்பல் படிச்சிருக்கீங்களா சார்?"

"இல்லைங்க. வச்சிருக்கீங்களா?"

"தர்றேன், கண்டிப்பா தர்றேன். நாளைக்கு வர்றப்ப எடுத்துட்டு வர்றேன்."

"என்கிட்டே அவரோட பயணக் கட்டுரை புத்தகம் தான் இருக்கு. 'கால்கள் வழியாக..' அற்புதமான புக்."

"கணையாழில ஒண்ணு ரெண்டு சார்ட் ஸ்டோரிஸ்தான் படிச்சேன். புக்கா வந்துடிச்சா அது?"

"இமயப் பதிப்பகம் போட்டிருக்காங்க. நாளைக்குத் தர்றேன். நீங்க நாடகம் பார்த்துவிட்டு வாங்க. அதில ஒரு குறிப்பிட்ட கேரக்டர் பத்தி கண்டிப்பா நாம டிஸ்கஸ் பண்ணியே ஆகணும்."

"நிச்சயமா" என்றாள் அம்பிகா.

***

"உன்னை மியூசிக் அகாடெமி வாசல்ல விட்டுறேன். எத்தனை மணிக்கு நாடகம் முடியுதுன்னு கேட்டுக்கிட்டு நான் பீச் போயிடறேன். கரெக்டா வந்து உன்னை பிக்கப் பண்ணிக்கிறேன்" என்றான் பைக்கில் அமர்ந்து கால்களை ஊன்றிக் கொண்டிருந்த முரளி.

"என்ன முரளி இது. இந்த நாடகம் அவ்வளவு நல்ல இருக்கும். எனக்காக வாங்கனேன்" என்றாள் அம்பிகா.

"வர்றதைப் பத்தி பிரச்னை இல்லை. வந்து... சரி வர்றேன், வா" என்று ஸ்டார்ட்

செய்து, "உக்காரு" என்றான்.

"உக்கார்றது இருக்கட்டும். என் ஹேர் ஸ்டைலை கவனிக்கலையா?"

"புது விதமா போட்டிருக்கே, அதானே?"

"எப்படி இருக்கு முரளி?"

"உனக்காக சொல்லணுமா. உண்மையை சொல்லணுமா?"

"உண்மை!"

"எனக்குப் பிடிக்கலை. சாதாரணமா சீவி பின்னல் போட்டுக்கிறதல உள்ள களை இதில இல்லை."

"அய்யோ! அய்யோ!" என்று தன் நெற்றியில் லேசாக தட்டிக் கொண்டாள் அம்பிகா.

"என்னாச்சு."

"என்னத்தான் உங்க ரசனையோ! இன்னைக்கு வசந்த் பத்து நிமிசத்துக்கு இந்த ஹேர்ஸ்டைலைப் பத்தி ஆச்சரியமா கேட்டார். நீங்க என்னடான்னா ஒரே வார்த்தையிலே பிடிக்கலைன்னுட்டிங்க."

"அதனாலதான் உண்மையை சொல்லவான்னு கேட்டுக்கிட்டேன். அதுசரி, யார் வசந்த்?"

"சரியாய் போச்சு. என்னோட பாஸ். அஸிஸ்டெண்ட் மேனேஜர். அவருக்கு நான் தான் செகரட்டரி. எத்தனையோ தடவை அவரைப் பத்தி சொல்லிட்டேனே."

"இன்னைக்குத்தான் பேர் சொல்றே அம்பிகா."



"இந்த நாடக டிக்கெட்ஸ் கூட அவர்தான் கொடுத்தார்."

"போலாமா?" என்று ஸ்டார்ட் செய்தான்.

பின்னால் அமர்ந்து கொண்டாள் அம்பிகா.

"என்ன வயசிருக்கும்?" என்றான் வண்டியை செலுத்திக் கொண்டே.

"யாருக்கு?"

"உன்னோட பாசுக்கு."

"முப்பதுக்குள்ளதான் இருக்கும். ஆளு என்ன பர்சனாலிட்டி! எந்தவிதமான டிரெஸ்ஸும் பொருந்துது. பயங்கரமான இன்டெலிஜெண்ட். இன்னும் மேரேஜ் ஆகலை. இந்த வருஷம் பண்ணிக்கச் சொல்லி பேரண்ட்ஸ் கம்பெல் பண்றாங்களாம். சொந்தத்திலே மூணு பொண்ணுங்க இருக்காங்களாம். எல்லாம் மக்காம். எதைப்பற்றி வேணும்னாலும் அவர்கிட்ட பேசலாம் முரளி. லேட்டஸ்ட் டெக்னாலஜி தெரிஞ்சி வச்சிருப்பார். ஒரு தடவை அறிமுகமாகிற யாருக்கும் அவரை உடனே பிடிச்சி போய்டும்."

"அவ்வளவுதானா, இன்னும் இருக்கா?"

"ஓ என் முரளிக்கு பொறாமை வந்துடுச்சாக்கும். ஒரு நாள் உங்களை அழைச்சிட்டுப்போய் அறிமுகப்படுத்தறேன். நான் சொன்னதெல்லாம் உண்மைன்னு உணர்வீங்க."

"அப்படியா?" என்ற முரளி அதற்கு மேல்

எதுவும் பேசவில்லை.

"என்ன திடீர்னு பேச்சு நின்னு போச்சு?"

"பைக் ஓட்டிகிட்டே பேசக்கூடாது அம்பிகா."

"அப்படியா?" என்று அவன் கேட்டதை போலவே குரல் மாற்றி கேட்டுச் சிரித்தாள் அம்பிகா.

நாடகம் துவங்கின நான்காவது நிமிட மே முரளி நெளியத் துவங்கினான்.

ஒரு ஆள் ஆதிவாசி போல இலைகளால் ஆடை தைத்து அணிந்துகொண்டு உடுக்கை மாதிரி ஒன்றை அடித்துக் கொண்டே மூன்று நிமிஷமாக பேசின தமிழ் இவனுக்கு முற்றிலும் புதிதாக இருந்தது.

"விருட்சங்கள் வேர்களை மறக்கலாம், வேர்கள் மறக்காது. பறவைகள் கூட்டை மறக்கலாம். கூடு மறக்காது. கூரம்பு வில்லை மறக்கலாம், வில் மறக்காது. ஜனிக்கின்ற உயிர்கள் யாவும் மறக்கின்ற முதல்வன் இறைவன் தொடுக்கின்ற கேள்விக்கெல்லாம் ஒரு நாள் பதில் சொல்வாயாக."

கைகட்டி மெய்மறந்து பார்த்துக்கொண்டிருந்த அம்பிகாவை ஆச்சரியமாக அரையிருட்டில் உன்னிப்பாகப் பார்த்தான் முரளி.

தமிழ் எனக்கும் தெரியும், உனக்கும் தெரியும் ஆனால் இந்த வகையை என்னால் ரசிக்க முடியவில்லை. உன்னால் முடிகிறதே அதெப்படி?

இது வேற அலைவரிசை அம்பிகா.



என்னால் இதில் பொருந்த முடியவில்லை. புரியவில்லை புரியாததால் ரசிக்கவில்லை. புரியாமைக்கு காரணம் ஆர்வமில்லாமையும், பயிற்சியின்மையும். நானாக ஆர்வமிருந்து வளர்ந்து வந்திருந்தால் ரசிக்கலாம். திடீரென்று உட்கார வைத்து ரசிக்கச் சொன்னால் முடியாது.

இதுபோன்ற உன்னத, உயர்தர விஷயங்களின் மேலெல்லாம் நீ ரசனை கொண்டிருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. உன்னோடு சேர்ந்து நானும் உன்னை உற்சாகப்படுத்த முடியவில்லையே என்று கவலையாக இருக்கிறது.

"முரளி வாட் சஸ் திஸ், நாடகத்தைப் பார்க்காம என்னையே பார்த்துகிட்டு இருக்கீங்க?" என்றாள் திடீரென்று திரும்பிப் பார்த்த அம்பிகா.

"ஒண்ணுமில்லை. நீ பாரு."

"நாடகம் பிடிச்சிருக்கா?"

"இந்த ஏ.சி.ஹால்ல உன்பக்கத்தில உட்கார்ந்திருக்கிறது இதமா இருக்கு."

"அந்த காட்டுவாசி யாரோட உருவகம் புரியுதா?"

"உருவகம்ன்னா?"

"இப்ப விளக்கம் சொல்ல முடியாது. இன்னொரு வேளையில சொல்றேன் பாருங்க."

முரளி தூக்கம் வந்தமர்ந்த இமைகளை உதறிக் கொண்டு உன்னிப்பாக பார்க்க முயற்சித்தான்.

இப்போது மேடையில் அந்த

ஆதிவாசியோடு ஒரு கோயில் பூசாரியும் நீளமான அங்கி தரித்த கிறிஸ்துவ பாதிரியார் ஒருவரும் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

முரளியால் கொட்டாவியைத் தவிர்க்க முடியவில்லை. ஏராளம் பேர் திடீரென்று கைதட்டுவதைப் பார்த்து தன்னால் ரசிக்க முடியவில்லையே என்று ஒரு சுய இரக்கம் பரவியது.




அலுவலகத்திற்கு அருகில் இருந்த ஹோட்டலில் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள் வசந்தும், அம்பிகாவும்.

"பியூட்டிஃபுல் டிராமா சார். ஐ ஹாவ் டு தேங்க் யூ."

"எதுக்கு தேங்ஸ்?"

"டிக்கெட்ஸ் கொடுத்துக்கு."

"நல்ல விஷயங்களை நிறையபேருக்கு சிபாரிசு செய்றது ஒரு வகை சேவை. யாரோட போனீங்க?"

"என்னோட....." என்று தயங்கி அம்பிகா. "என்னோட ஃப்ரெண்ட் ஒருத்தரோட போனேன்." அவருக்கு இந்த மாதிரி விஷயங்களிலே எல்லாம் ஆர்வம் இல்லை.



[illegible]. கொட்டாவி விட்டார். இன்டெர்வெலுக்கு மேல நீட்டா சாஞ்சி தூங்கவே ஆரம்பிச்சிட்டார்", என்றாள்.

"சரியான கம்பெனியோட போயிருக்கணும் நீங்க."

"வேற வழி இல்லை சார்."

"ஜஸ்ட் கால் மி வசந்த். எதுக்கு சார், சார்ன்னு தூரமா நிப்பாட்றீங்க. அந்த பொண்ணோட கேரக்டர் எப்படி, ரசிச்சீங்களா?"

"ரொம்ப, ஒரு கிராமத்துப் பொண்ணை வச்சி பெண் சுதந்திரத்தைப் பத்தி அக்கு வேற ஆணிவேறயா அலசிட்டார் டைரக்டர். ஸ்டேஜ்ல நடக்கறப்ப பொதுவா முகத்தில எமோஷன்ஸ் காட்ட மாட்டாங்க அதிகமாக. காட்டி பிரயோஜனமில்லைங்கிறதால. ஆனா அந்தப் பொண்ணோட கண்ணு மட்டும் தனியா நடிக்கும்."

"ஆமாம். அவதான் டைரக்டரோட பொண்ணு."

பில் வந்தபோது வசந்த் மணிபர்ஸ் எடுக்க, "நான் பே பண்றனே ப்ளீஸ்" என்று தடுத்து அம்பிகா பணம் வைத்தாள்.

***

"வர்ற ஸண்டே நீங்க ஃப்ரீயா அம்பிகா?"

"என்ன விஷயம்?"

"ரஷ்யன் எம்பஸில ஒரு ஆர்ட் எக்ஸிபிஷன் இருக்கு. மார்க்ஸார்க்கோன்னு

ஒரு பெரிய ஆர்ட்டிஸ்ட் ரஷ்யாவை கேள்விப்பட்டிருக்கிங்களா?"

"ம்கூம்."

"அவர் வந்திருக்கார். அவரோட ஆர்ட் எக்ஸிபிஷனுக்கு அங்கே என்ட்ரன்ஸ் டிக்கெட் உண்டு. கேட் க்ராஷ் உண்டு. இங்கே காத்து வாங்குதுன்னு சொன்னாங்க. வர்றிங்களா, நல்லா இருக்கும்."

"கண்டிப்பா வர்றேன். எங்கே மீட் பண்றது?"

"எம்பசி வாசல்லயே நான் வெயிட் பண்றேன். பத்து மணிக்கெல்லாம் வந்துடுங்க."

"சரி."

***

"அம்பிகா, உங்களுக்கு போன்"

"ஹலோ, அம்பிகா ஸ்பீக்கிங்"

"முரளி பேசறேன்."

"ஹாய், எப்படி இருக்கிங்கம்மா?"

"ஃபைன், பார்த்து நாலு நாளாச்சு."

"இங்கே கொஞ்சம் வொர்க் லோட் அதிகம். ஆபீஸ் முடிஞ்சதும் டயர்டாகி வீட்டுக்குப் போய்டறேன் முரளி."

"பரவாயில்லை. நாளைக்கு ஸண்டே. என்ன செய்யலாம்? நீ, நான் என் தங்கை மூனு பேரும் கேரம் போர்டு விளையாடலாமா?"

"இல்லைம்மா. எனக்கு வேற ஒரு ப்ரோக்ராம் இருக்கு. வர்றிங்களா, நீங்களும் வர்றிங்களா?"



"எங்கே?"

"ரஷ்யன் எம்பசில ஒரு ஆர்ட் எக்ஸிபிஷன், பார்க்க வாரேன்னு.."

"நான் வரலை அம்பிகா."

"தெரியும். நீங்க வர மாட்டிங்கன்னு. வந்தாலும் உங்களுக்கு பிடிக்காது. வசந்த் வர்றேன்னு சொன்னார். போய்ட்டு வந்துடறேன். ஈவினிங் வேணும்னா பார்க்கலாமா?"

"வேணாம்."

"ஏன்?"

"ஈவினிங் எனக்கு வேலை இருக்கு."

"என்ன வேலை?"

"ஒருத்தரை மீட் பண்றதா சொல்லிருக்கேன்."

"எனக்காக அதை கேன்சல் பண்ணக்கூடாதா முரளி?"

"உன்னோட மார்னிங் ப்ரோக்ராமை எனக்காக நீ கேன்சல் பண்ண முடியாதா அம்பிகா?"

"நாளைக்கு ஒரு நாள்தான் எக்ஸிபிஷன் முரளி. நாம நாளன்னைக்கு பார்க்கலாம். ஓக்கே? நோ ஹார்ட் ஃபீலிங்க் ப்ளீஸ்.."

***

"பாய் மரக்கப்பல் படிச்சேன் அம்பிகா. ரகுவம்சன் ஈஃ எ ஜீனியஸ்."

"ஆமாம் வசந்த். அதில நிறைய இடங்கள்ல நான் பென்சிலால் அண்டர்லைன் பண்ணிருப்பனே, பார்த்திங்களா?"

"என்ன ஒரு பொருத்தம் பாருங்க. அந்த லைன்ஸ் எல்லாம் எனக்கும் ரொம்ப பிடிச்சது அம்பிகா, நம்ம ரெண்டு பேருக்கும் பல விஷயங்கள்ல ரசனைகள் ஒரே மாதிரியா இருக்கு இல்லே?"

"ஆமாம்"

***

"அம்பிகா, உங்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தியை சொல்லப் போறேன்."

"என்னங்க வசந்த்?"

"ரகுவம்சன் மெட்ராஸ் வந்திருக்கார். தாஜ் ஹோட்டல்ல தங்கிருக்கார். ஈவினிங் அஞ்சு மணிக்கு அவரை மீட் பண்றதுக்கு அப்பாயின்ட்மெண்ட் வாங்கி யிருக்கேன். வர்றிங்கதானே?"

"கண்டிப்பா."

"என் கார்லயே போய்டலாம்"

"ஷ்யூர்."

***

"முரளி பேசறேன் அம்பிகா."

"சொல்லுங்க."

"இன்னிக்கு ஈவினிங் நாம மீட் பண்ணியாகணும் அம்பிகா."



"என்ன அப்படி அவசரம்?"

"நம்ம கல்யாணத்தைப் பத்தி முடிவுகள் எடுத்தாகணும். வீட்ல ரொம்ப வற்புறுத்த ஆரம்பிச்சிட்டாங்க. வேலை கிடைக்கட்டும்னு சொன்னேன். வேலை கிடைச்சாச்சு. இன்னும் எதுக்கு தள்ளிப் போடணும் அம்பிகா?"

"இன்னும் முதல் மாச சம்பளம் கூட வாங்கலை முரளி. பேசலாம். நாளைக்கு பேசலாம்."

"ஏன், இன்னிக்கு என்ன அஷ்டமியா?"

"இல்லை. ரகுவம்சன்னு ரைட்டர் தெரியுமில்லே?"

"தெரியாது."

"உங்களுக்கு யாரைதான் தெரிஞ்சிருக்கு? அந்த ரைட்டர் மெட்ராஸ் வந்திருக்கார். அவரை சந்திக்க அப்பாயின்ட்மெண்ட் வாங்கியிருக்கேன். இந்த சான்சை விட முடியாது. நாளைக்கு கண்டிப்பா பார்க்கலாம்."

"நாளைக்கு வேற எந்த ரைட்டரும் வரலையா?"

"வரலை. நீங்க அனாவசியத்துக் கோபப் படறிங்க. ரகுவம்சன் கதைகள் படிச்சங்கவங் களுக்குத்தான் அவர் அருமை தெரியும். நாளைக்குப் பார்க்கலாம் முரளி.

***




ஆட்டோவில் இருந்து இறங்கின மாமா வாழைத்தார், பெரிய பையுடன் வீட்டுக்குள் வந்தபோது முரளி ஷூவுக்கு பாலிஷ் போட்டுக் கொண்டிருந்தான்.

அப்படியே வைத்துவிட்டுப் போய் பையை வாங்கிக் கொண்டு, “வாங்க மாமா, வாங்க, அத்தை வரலையா?” என்றான்.

குளித்து விட்டு ஈரத்துண்டோடு வந்த அப்பா, “அடடே, வாங்க மச்சான் உக்காருங்க. கம்பன் எக்ஸ்பிரஸ்லயா வந்திங்க?” என்றார்.

மாமா நாற்காலியில் அமர்ந்து ஜிப்பாவுக்குள் ஊதிக் கொண்டு. “ஆமாம். மீட்டருக்கு மேல அஞ்சு ரூபா கேக்கறான்ப்பா. ரயில் சார்ஜைவிட ஆட்டோ சார்ஜ் அதிகமா இருக்கு. எங்கே வடிவு?” என்றார்.

“அடுத்த தெருவுல ஒரு கல்யாணம். அதுக்கு அம்மாவும் கவிதாவும் போயிருக்காங்க” என்ற முரளி, “ஊர்ல எல்லாரும் சௌக்கியம்தானே?” என்றான்.

“எல்லாரும் நல்லா இருக்காங்க. ஞாயிற்றுக் கிழமையா பார்த்து வந்தாதான் உன்னைப் பார்க்க முடியும்ன்னு தான் நான் இன்னைக்கு வந்தேன். குளிச்சுட்டு வந்துடறேன் முதல்ல...”



மாமா குளித்துவிட்டு நெற்றியில் பட்டையாக விபூதி பூசிக்கொண்டு கைக்குட்டை மடக்கி சட்டை பாக்கெட்டில் வைத்துக் கொண்டபோது, அம்மாவும் தங்கையும் வந்து விட்டார்கள்.

வரவேற்பு, நலம் விசாரிப்பு முடிந்து, டிபன் சாப்பிட்டு மாமா வெற்றிலை செல்லும் பிரித்துக் கொண்டு பாய் வேண்டாமென்று தரையில் அமரவே, அப்பாவும் முரளியும் கூட அருகில் தரையிலேயே அமர்ந்தார்கள்.

“வடிவு, வேலை முடிச்சிட்டேன்னா நீயும் வந்து இப்படி உக்காரும்மா. இன்னைக்கு முகூர்த்த நாள். ஒரு நல் நாள்ல ஒரு நல்லபேச்சை ஆரம்பிக்கலாம்னு நினைக்கிறேன். நேரா வந்துடறேன். மீனாட்சி பிஎஸ்சி. முடிச்சுட்டா எம்எஸ்சி படிக்கணும்னா. நான் வேணாம்னுட்டேன். ஜாதகம் எடுத்து வெளில பார்க்க இஷ்டமில்லை எனக்கு. முரளிக்கு கொடுக்கணும்னு எனக்கும் என் பொண்டாட்டிக்கும் ஆசை. நாம ஆசைப்பட்டா போதாதுன்னு மீனாட்சியையும் கூப்பிட்டு உக்கார வச்சி விவரமா கேட்டுட்டேன். அவளுக்கும் இஷ்டம். உங்களுக்கும் தெரியாததில்லை. என் சக்தி தெரியும். என்ன முடியுமோ செய்றேன். மீனாட்சியை நீங்க புதுசா பார்க்க வேண்டியதில்லை. நம்ம வீட்டுப் பொண்ணு குணம் எப்படின்னு உங்களுக்குத் தெரியும். மனசுக்குள்ளே வச்சுக்காம போட்டு உடைச்சுட்டேன். இனிமே யோசனை பண்ணி முடிவுக்கு வர வேண்டியது நீங்கதான்”

மாமா பேசி முடித்தவுடன் எல்லோரும்

அமைதி யானார்கள்.

முரளி அப்பாவை பார்த்து, "நீங்களே சொல்லிடுங்கப்பா" என்றான்.

"எதா இருந்தாலும் கம்மா சொல்லுங்க."

"அதில்லை மச்சான். நீங்க கேட்டது தப்பில்லை. கேக்க உரிமை இருக்கு. கட்டிருக்கிறது நியாயம்தான். மீனாட்சியை விட லட்சணமா, குணமா ஒரு பொண்ணு நம்ம ஜாதில கிடைக்காதுங்கிறது வாஸ்தவமான விஷயம். ஆனா இப்ப காலம் மாறிப் போச்சு. நம்ம காலம் இல்லை பாருங்க. முரளி இங்கே அம்பிகான்னு ஒருபொண்ணை பார்த்துப் பேசி பழகி, காதலிச்சுட்டு. வீட்டுக்கு வந்து அறிமுகப்படுத்தி வச்சான். பொண்ணு நல்லா இருக்கா. நல்லா பேசறா. பிள்ளைங்க சந்தோஷம்தானே நமக்கு முக்கியம். வற்புறுத்த முடியாதே மச்சான். சரிப்பான்னு சொல்லிட்டேன்."

மாமாவின் முகத்தில் ஏமாற்றம் அப்பட்டமாகத் தெரிந்தது.




அலுவலக வேலைகள் முடிந்து அம்பிகா தன் ஹேண்ட் பேகை எடுத்துதோளில் போட்டுக் கொண்ட போது, ஃபோன் வந்து



"மேடம் உங்களை ஏ.எம். கூப்பிடறார்" என்றான்.

வசந்த் அவன் அறைக்குள் வந்தபோது தன் டையை சரி செய்து கொண்டிருந்தான்.

"உக்காருங்க அம்பிகா."

அமர்ந்தாள்.

தன் மேஜை டிராயரைத்திறந்து ஒரு கவர் எடுத்தான். அவளிடம் நீட்டினான். வாங்கிக் கொண்டாள். பார்த்தாள். அந்த கவர் ஒட்டப்பட்டிருந்தது.

"என்ன இது?"

"லெட்டர். நான் எழுதிருக்கிற ஒரு லெட்டர் பர்சனல் லெட்டர். உங்களுக்கு எழுதியிருக்கேன். சில விஷயங்கள்ல பேச்சைவிட எழுத்துக்கு சக்தி அதிகம். படிச்சிப் பாருங்க. உங்க வீட்ல, தனிமைல படிங்க. நிதானமா ஒரு முடிவுக்கு வாங்க. நாளைக்கு பார்க்கலாம்" என்று புறப்பட்டான் வசந்த்.

எதுவும் புரியாமல் சற்று நேரம் அந்தக் கடிதத்துடன் நின்ற அம்பிகா பிறகு புறப்பட்டாள். வீட்டிற்கு வந்து படிக்க பொறுமையில்லாமல். பஸ்ஸில் டிக்கெட் வாங்கியதுமே, பிரித்து எடுத்து படிக்கத் துவங்கினாள்.

அன்புள்ள அம்பிகா,

உங்களுடன் சமீப காலமாகத்தான் எனக்கும் பழக்கம். ஆனால் பல வருடங்கள் பழகியது போல ஒரு உணர்வு ஏன் வருகிறது என்றெனக்குப் புரியவில்லை.

உங்கள் குணம், புத்திசாலித்தனம், ரசனைகள் எல்லாம் என்னுடன் ஒத்துப் போவதில் எனக்கு நிறைய மகிழ்ச்சி.

சுற்றி வளைக்கவேண்டாம். எனக்கு உங்களைப் பிடித்திருக்கிறது. காதல் ஏற்படுத்தி என்னை ஒருவித மயக்கத்தில் ஆழ்த்தி இரவெல்லாம் பஜார் கனவுகளை ஏற்படுத்துகிறீர்கள் என்றெல்லாம் மிகையாக எழுதப் பிரியமில்லை.

ஐ லைக் யு. தட்ஸ் ஆல். அடுத்த கட்டமாக யோசித்துப் பார்க்கும்போது நாம் ஏன் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற கேள்வி எழுகிறது.

எல்லாவிஷயங்களிலும் ஒத்துப் போகும் நாம் வாழ்க்கையில் இணைந்தால் அந்த வாழ்க்கை மிகவும் இனிமையாக இருக்கும் என்பது என் எண்ணம்.

இது ஒரு கோரிக்கை. ஏற்கலாம். நிராகரிக்கலாம். உங்களுக்கு முழு உரிமை உண்டு. ஏற்கப் பட்டால் மகிழ்வேன். நிராகரிக்கப்பட்டால்.. நம் நட்பு என்றும் போல் தொடரும். என்றும் கண்ணியம் தவற மாட்டேன்.

யோசியுங்கள். உங்கள் குடும்பத்தில் கலந்தாலோசியுங்கள். எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள்.

தங்களன்புள்ள
வசந்



அந்தக் கடிதம் அம்பிகாவுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. ஆனால் பேரதிர்ச்சியாய் இல்லை. கவரை வாங்கும் போதே இது காதல் கடிதமாக இருக்குமோ என்ற ஒரு யூகம் ஏற்பட்டது எனக்கு. அது ஏன்?

இதென்ன புது குழப்பம்?




கீதமாலினி தன் பாமரேனியனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு சாஸரில் பால் ஊற்றி அதற்குப் புகட்டிக் கொண்டே, "அப்புறம்?" என்றாள்.

புல்வெளியில் அவளுக்கு எதிர் நாற்காலியில் அமர்ந்திருந்த அம்பிகா கையில் டீக்கோப்பை இருந்தது.

அதை மூங்கில் டீப்பாய் மேல் வைத்துவிட்டு, தன் ஹேண்ட்பாகில் இருந்து வசந்த் எழுதின கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"நீயே படித்துப் பாரு கீதா."

கீதா அந்தக் கடிதத்தை நிதானமாகப் படித்தாள்.

"ஓக்கே. ஒரு ஆம்பளை இதைவிட டீசன்ட்டா தன் மனசை வெளிப்படுத்த முடியாது அம்பிகா. வெல். இப்ப என்ன உன்

பிரச்னை?"

"எல்லாம் தெரிஞ்சுக்கிட்டு அப்புறம் என்ன பிரச்சனைன்னு கேக்கறியே கீதா."

"அம்பிகா, ஐ டோண்ட் கெட் யுவர் பாய்ண்ட். அவர் தான் தெளிவா எழுதியிருக்காரே, ஏத்துக்கலாம் - இல்லை நிராகரிக்கலாம்னு. நீ ஓபனா சொல்ல வேண்டியதுதானே - "ஏத்துக்கறதும் நிராகரிக்கிறதுமில்லை பிரச்னை, நான் ஏற்கனவே எங்கேஜ்ட்னு"

அம்பிகா அமைதியாய் நகம் கடித்துத் துப்பினாள்.

"எனக்குக் குழப்பமா இருக்கு கீதா" என்றாள்.

"அதாவது நான் சொன்ன மாதிரி உன்னால பட்டுன்னு சொல்ல முடியாதுன்னு தோணுது. அப்படின்னா உன் குழப்பத்துக்கு பல அர்த்தங்கள் இருக்கு அம்பிகா. மனம் திறந்து பேசு. அந்த வசந்த் உன்னை ஓரளவு சலனப்படுத்தி யிருக்கிறது உண்மையா, இல்லையா?"

"எனக்கு சொல்லத் தெரியலை கீதா."

"சொல்லத் தயங்கறே. ஏற்கனவே பல தடவை அந்த வசந்தை அட்மையர் பண்ணி நீ பேசியிருக்கே. ஒரு ஃப்ரண்டாதான் பழகிட்டிருக்கேன்னு நினைச்சேன். உன்னையும் மீறி ரகசியமா ஒரு நேசிப்பு இருந்திருக்கு. அதனாலதான் இப்ப குழப்பம்."

"நேசிப்புன்னு சொல்லாதே. எனக்கு வசந்தை பிடிக்கும்."

"சரி வார்த்தைல என்ன வந்தது? நீ



...ரளியை விரும்பறியா இல்லையா?"

"நிச்சயமா. முரளி ஒரு ஜெண்டில்மேன் ...ரது."

"ஆனா இந்த லெட்டர் உன்னை ...னப்படுத்துது"

"ஆமாம்."

"அதாவது நல்லவரா இருந்தாலும் ...சனைகள்ன்னு வர்றப்ப ஒத்துப் போகாதவர் ...ரளி. ரசனைகள்ல ஒத்துப் போற, நீ விரும்பற ...ரு கேரக்டர் உன்னை மணக்க முன் ...ந்திருக்கார். உனக்கு இப்ப சாய்ஸ் இருக்கு. ...ற்கனவே முரளியை காதலிச்சி அவரோட ...ழகிட்டதுதான் இப்ப உனக்கு முன்னால ...இருக்கிற தடைக்கல். முரளியோட உன் ...ந்திப்பே நடக்கலைன்னு வச்சிக்கோ.. அப்ப ...இந்த லெட்டருக்கு உன் பதில் சம்மதம்தான். ...கரெக்டா?"

மௌனமாக தலையசைத்தாள்.

"இப்ப சாய்ஸ் உன்னோடதுதான் அம்பிகா. முரளியோட பழகினே காதலிச்சே. ஆனா கல்யாணமும் ஆகலை. வேற எந்த தப்பும் நடக்கலை. முரளி அன்பானவர். உன்மேல அன்பை பொழியறவர். ஆனா ...சுவாரசியம் குறைவான ஆசாமி. உன் டேஸ்ட்டுக்கு பொருத்தம் வசந்த். அவரும் உன்மேல அன்பு வச்சிருக்கார். அதனால நீ வசந்துக்கு யெஸ் சொல்லலாம்னு எனக்குத் தோணுது."

"இது முரளிக்கு செய்ற துரோகமில்லையா?"

"இல்லை. காதலிச்சிட்ட காரணத்துக்காக

முரளியை கல்யாணம் பண்ணிக்கிட்
வாழ்க்கை பூரா அவஸ்தை படறது உனக்கே
செஞ்சிக்கிற துரோகம். வாழ்க்கை ஒ
நடவைதான் அம்பிகா. அதில மனசுக்கு
பிடிச்சபடி வாழ வேணாமா? முரளி பெண்க
விஷயத்தில் சபலப் படறவரா இல்லையான்
நமக்குள்ளே ஒரு பேச்சு வந்தப்ப அவ
டெஸ்ட் பண்ணிடலாம்னு முடிவு பண்ண
என்னோட கூட நடிக்கிற பொண்ணை விட்
அவரை சபலப்படுத்திப் பார்த்தோம். அதி
அவர் ஜெயிச்சிட்டார் அந்த மாதிரி ஒ
டெஸ்ட் இந்த வசந்துக்கு அவசியமா எனக்கு
பட்லை. ஏன்னா இந்த லெட்டர்ல எவ்வள
நாகரிகமான வார்த்தைகளை எல்லா
பயன்படுத்திருக்கார் பாரு. நிச்சயம
ஜென்டில்மேன்தான்."

"அதெல்லாம் சரி தேமா. என் மனசில
பேதலிச்சிக்கிட்டிருக்கிறதை எல்லாம்
படபடன்னு சொல்லிட்டே எனக்கு தவிப்பா
இருக்கு."

"துரோகம்ங்கிறதை மறந்துட்டு சொல்லு
சின்ன குழந்தையைக் கேப்பமே உனக்கு
அப்பாவை பிடிக்குமா, அம்மாவை
பிடிக்குமான்னு. அது மாதிரி சிம்பிளா
கேக்கறேன். காதலிச்சதை எல்லாம் மறந்துட்டு
சொல்லு. முரளி - வசந்த் ரெண்டுபேர்ல யா
உனக்கு கணவனா வந்தா நீ சந்தோஷ
படுவே?"

தயங்கினாள், பிறகு சொன்னாள், "வசந்த்"
என்று.

"தட்ஸ் ஆல், இதான் மனசோட தீர்ப்



உன் மனசோட தீர்ப்புப்படி நடந்துக்கோ, மத்த நியாய அநியாயங்களை எல்லாம் பார்க்காதே. இப்ப அடுத்த கட்டமா நீ என்ன செய்றே... வசந்தை சந்திக்கிறே. மனசுவிட்டு எல்லாம் சொல்றே. எதையும் மறைக்காம சொல்றே, நான் உங்களைதான் விரும்பறேன்னு சொல்றே. அவர் பக்குவமானவர்தான்? நிச்சயமா உன்னை ஏத்துக்குவார்" என்றாள் தேமாலினி.

"முரளிகிட்ட எப்படி சொல்றது தேமா?"

"அந்தப் பொறுப்பு என்னோடது. நீ அவரைப் பார்க்கிறதுங்கிறது ரொம்ப சங்கடமான விஷயம். நான் பார்த்துப் பேசறேன். நான் அவரோட பேசினதுக்கப்புறம் நீ வசந்த்கூட பேசலாம் ஓக்கே?"

"ஓக்கே" என்றாள் அம்பிகா ஒரு தீர்மானத்திற்கு வந்து.




அலுவலகத்தின் ரிஸப்ஷன் பகுதியில் இருந்த சோபாவில் கைகளைக் கட்டிக் கொண்டு எல்லாவற்றையும் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்த முரளி நீண்ட நேரம் அப்படியே அமர்ந்திருந்தான்.

எதிரே இருந்த தேமாலினி கைக்குட்டை—

யால் தன் குளிர் கண்ணாடியை துடைத்துக் கொண்டு, "இதான் அவனோட நிலைமை சார். அவனோட இடத்தில்யார் இருந்தாலும் விவேகமான முடிவெடுக்கறதா இருந்தா இப்படித்தான் எடுத்தாகணும். அவ உங்களை சந்திக்க சங்கடப்பட்டுதான் என்னைச் சொல்லச் சொன்னா" என்றான்.

"இப்ப நான் என்ன செய்யணும்?" என்றான் அமைதியாக.

"அவனை மறக்கணும். மன்னிச்சிடணும். அவனோட கல்யாணத்துக்கு எந்த வகையிலயும் இடைஞ்சல் தரக்கூடாது."

"நீங்க சொன்னதெல்லாம் விளையாட்டில்லையே. அம்பிகாதானா இப்படி எல்லாம் சொல்லிட்டா?"

"உங்க கோபம் நியாயமானது. அதே மாதிரி அவனுக்கு ஏற்பட்ட சிக்கலும் நியாயமானது. அந்த சிக்கலுக்கான தீர்வும் நியாயமானது."

"அப்படியா? மேடம் எங்க காதல்ல நீங்க ஒரு மூணாம் மனுஷி. உங்களுக்குத்தெரியாது. பல தடவை என் மேல கோபப்பட்டு என்னை அவ காயப்படுத்தியிருக்கா. அப்பல்லாம் என் ஈகோ ஹர்ட்டானதே இல்லை. குழந்தை காலால உதைக்கிறதில கிடைக்கிற சுகமாதான் அவ அலட்சியப்படுத்தினப் பல்லாம் நினைச்சேன். அறிவும் ரசனையும் ஓரளவு வளர்த்துக்கறது. ஆனா அடிப்படை யாவே



அமையணும். நான் அவளை இப்ப கூட வெறுக்கலை. வருத்தமா இருக்கு. அவ எனக்குக் கிடைக்கலையேன்னு ஏமாற்றமா இருக்கு. பரவாயில்ல. அவ சந்தோஷமா இருந்தா சரி. சின்னச் சின்ன ஏமாற்றங்களைக் கொடுத்து என்னை இந்த பெரிய ஏமாற்றத்துக்கு அவ ஏற்கனவே தயார் செஞ்சுட்டா. என்னோட வாழ்த்துக்களை சொல்லுங்க. அவ வாழ்க்கையில நான் எந்த வகையிலயும் குறுக்கிட மாட்டேன்னு சொல்லுங்க." - என்றவன் விருட்டென்று எழுந்து உள்ளே போய் விட்டான்.

சில நிமிடங்கள் கழித்து, பெருமூச்சு விட்டுவிட்டு சீதாமாலினி எழுந்து கொண்டாள்.

வெளியே வந்தாள். தெருமுனையில் நிறுத்தியிருந்த தன் காருக்கு வந்தாள்.

காரில் அமர்ந்ததுமே, ஏற்கனவே அமர்ந்திருந்த அம்பிகா கேட்டாள். "பார்த்தியா? பேசினியா?"

"ம்" என்றவள் முழுக்க ஆரம்பித்துசொல்லி முடித்து, "பாவமா இருந்துச்சிடி. பார்க்க. காதலி மறந்துடுன்னு சேதி சொல்லி அனுப்பறா. அப்பவும் முகத்தில அதே சாந்தம். ஜென்டில்மேன். இன்னும் கொஞ்சம் இருந்தா அழுதிருப்பார்." என்றாள் சீதாமாலினி.

கலங்கிப் போயிருந்த தன் கண்களைத் துடைத்துக் கொண்ட அம்பிகா, "சீதா, ஆனாலும் இது துரோகம்தான். சுய நலத்துக்காக இதை செய்ய வேண்டியிருக்கு."

"சுயநலமில்லாத உயிரினமே கிடையாது

அம்பிகா. கலங்காதே. இப்ப உனக்கு க்ளியர்ட். நேரா உன்னை உன் ஆபீஸ் வாசல்ல ட்ராப் பண்ணிடட்டுமா?"

"வேணாம். இந்த விஷயத்தை ஆபீஸ்ல வச்சி பேச விரும்பாததால தான் நான் லீவு போட்டுட்டேன். அந்த டெலிபோன் பூத் பக்கத்தில நிறுத்து."

அம்பிகா இறங்கிச் சென்று போன் செய்தாள்.

"ஹலோ வசந்த் ஹியர்."

"அம்பிகா பேசறேன் வசந்த்."

"என்ன லீவு போட்டுட்டீங்க, உடம்பு எதுவும் சரி யில்லையா?"

"இல்லை. மனசுதான் சரியில்லை."

"என் லெட்டர் உங்களை சங்கடப்படுத்தியிருந்தா, ஃபர்கெட் இட். அதை கிழிச்சுப் போட்டுடுங்க அம்பிகா. நான் கொடுக்கவே இல்லைன்னு நினைச்சுக்கங்க. பீ ஸ்போர்ட்டிவ் ப்ளீஸ்."

"நான் உங்களோட நேர்ல பேசணும். நிறைய பேசணும். ஆபீஸ்ல வேணாம். வெளில எங்கயாவது மீட் பண்ணலாம்."

"ஷ்யூர். எங்கேன்னு சொல்லுங்க. வர்றேன்."

"பெஸன்ட் நகர் பீச்?"

"சரி ஈவினிங் அஞ்சரை மணிக்கு என் கார்ல வந்துடறேன். போலீஸ் பூத் எதிர்ல நிறுத்தி வெயிட் பண்றேன். வாங்க, பேசலாம்."

"சரி" என்று வைத்தாள் அம்பிகா.






கடலலைகள் நிரந்தர உற்சாகத்துடன் துள்ளிக் கொண்டிருக்க, குழந்தைகள் சறுக்கு மரத்திலும், இரும்பு படிக்கட்டு அமைப்புகளிலும் ஏறி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

வசந்த் காரின் ஒரு பக்க கதவைத் திறந்து வைத்து கால்களை வெளியே தொங்கப் போட்டுக் கொண்டு, டேப்பில் பி.சுசிலாவின் பழைய பாடல்களை ரசித்துக்கொண்டு காத்திருந்தான்.

சற்று நேரத்தில் ஒரு ஆட்டோவில் வந்து இறங்கின அம்பிகா இளம் மஞ்சளில் சுரிதார் அணிந்து அதே நிறத்தில் தலையில்ரோஜா செருகியிருந்தாள். பறந்த துப்பட்டாவை அழுத்திப் பிடித்துக் கொண்டு அவனருகில் வந்து "குட் ஈவினிங்" என்றாள்.

"குட் ஈவினி" என்று காருக்குள் நகர்ந்து அவள் அமர்வதற்கு இடம் கொடுத்தான்.

ஆடும் பொம்மை சன்னமாக ஆட, இரண்டு பேரும் கொஞ்ச நேரம் அந்த பொம்மையையே புராதன பொருள் போல பார்த்த பிறகு- அம்பிகா செருமிக் கொண்டாள்.

"கொஞ்சம் பாட்டை நிப்பாட்டலாமா?"

என்றாள்.

"கொஞ்சம் என்ன, முழுசாவே நிறுத்திடலாம்" என்று டேப்பை அணைத்து விட்டு கைகளை காரின் ஸ்டியரிங்கின் மேல் வைத்துக் கொண்டான்.

"உங்க லெட்டருக்கு நான் பதில் சொல்றதுக்கு முன்னாடி சில சுய விளக்கங்கள் தர வேண்டியிருக்கு வசந்த்."

"சொல்லுங்க."

"உங்களை சந்திக்கிறதுக்கு முன்னாடி ஏற்கனவே நான் முரளிங்கிறவரோட பழகினேன். அவர் ஒரு எல்.ஐ.சி டெவலெப்மெண்ட் ஆபீசர். நல்லவர் என்மேல அன்பைப் பொழிஞ்சவர். எனக்கும் அவரைப் பிடிச்சது. தயங்கித் தயங்கி அவர் என்னை நேசிக்கிறதை சொன்னப்போ என்னால அதை ஏத்துக்க முடிஞ்சது. ஆனா அதுக்கப்புறம் தான் அவரோட ஒவ்வொரு குணமா தெரிய வந்தது. கெட்டப் பழக்கங்கள் எதுவும் இல்லை. அதே மாதிரி நல்லப் பழக்கங்களும் அதிகம் இல்லை. உங்களுக்கே தெரியும் எனக்கு எதிலெல்லாம் ஈடுபாடுன்னு. அவருக்கு கலை சம்பந்தப் பட்ட எதிலயும் ஈடுபாடு துளியும் கிடையாது. ஏற்படுத்திக் கவும் மாட்டாரு. அவரோட ஐ க்யூ ஒரு எல்லையைத் தாண்டறதே இல்லை. எனக்கு அதனாலேயே அவர் மேல திடீர், திடீர்னு வெறுப்பு வரும். கோபம் வரும். இவரைப் போய் எப்படி காதலிச்சி தொலைச்சோம்னு நான் ரகசியமா நினைக்கிறதுண்டு. இவரை கல்யாணம் பண்ணிக்கிட்டா நாளைக்கு



சந்தோஷமா இருக்க முடியுமான்னு அடிக்கடி சந்தேகப்படுவேன். அதனாலேயே அவர் கல்யாணப் பேச்சை எடுக்கறப்ப எல்லாம் தள்ளிப் போடுவேன் நான்"

அவள் பேச்சை நிறுத்த, வசந்த் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தவன் "ம், சொல்லுங்க" என்றான்.

"அந்த சந்தர்ப்பத்திலதான் உங்களை சந்திச்சேன். உங்களோட பழக ஆரம்பிச்சதும் - என்னோட ரசனைகளும் உங்களோட ரசனைகளும் ஒண்ணா இருந்தது. எனக்கு மகிழ்ச்சியா இருந்தது. உங்களை முரளிக்கு முன்னால நான் சந்திச்சிருக்கக் கூடாதான்னு மனசுக்குள்ளே ஆதங்கப் பட்டிருக்கேன். ரகசியமா நீங்க என் மனசுக்குள்ளே ஆக்கிரமிக்க துவங்கிட்டீங்க. எனக்குள்ளே ஒரு பக்கம் வேதனை. ஒரு பக்கம் சுகம். ஒரு மாதிரியான தவிப்பில இருந்தப்பதான் நீங்க லெட்டர் கொடுத்திங்க. நீங்களும் என்னை விரும்பறது தெரிஞ்சதுக்கப்புறம் என்னை நானே ஏமாத்திக்க விரும்பலை. வசந்த், நான் முரளியை விரும்பினேன். உண்மை. ஆனா அது வயசுக்குரிய சலனம். ஆனா உங்களை விரும்பறதுதான் வயசும், மனசும் இணைஞ்ச ஒரு காதல். முரளிக்கும் எனக்கும் இருந்தது ஒரு டீஸண்ட்டான உறவு. அவர் விரல் கூட என் மேலபட்டதில்லை. ஐ லவ் யூ வசந்த். என்னை ஏத்துக்க நீங்க தயாரா?"

கடகடவென்று பேசிவிட்டு சட்டென்று மௌனமானாள் அம்பிகா.

வசந்த் சில நிமிடங்கள் அமைதியாக

இருந்து, "இப்ப நீங்க எடுத்திருக்கிற முடிவு முரளிக்குத் தெரியுமா?" என்றான்.

"தெரியும். என் ஃப்ரெண்ட் மூலமா தெரியப்படுத்தினேன்."

"என்ன சொன்னாராம்?"

"ரொம்ப ஏமாற்றமா ஃபீல் பண்றதாவும், நான் சந்தோஷமா இருக்கிறதுதான் முக்கியம்னும் சொல்லியிருக்கார். என் கல்யாணத்திலயோ, வாழ்க்கையிலயோ சிக்கல் எதுவும் ஏற்படுத்த மாட்டேன்னு சொல்லியிருக்கார்."

வசந்த் சற்று நேரம் கடலை பார்த்தான்.

பிறகு திடீரென்று கை நீட்டி திறந்திருந்த கதவை சாத்தினான். காரை ஸ்டார்ட் செய்து புறப்பட்டான்.

"எங்கே போறோம்?" என்றாள் அம்பிகா புரியாமல்.

"நான் பதில் சொல்றதுக்கு முன்னாடி உங்களை ஒருத்தருக்கு அறிமுகம் செய்யணும். அதுக்கப்புறம் மிச்சத்தைப் பேசிக்கலாம்" என்றான் வசந்த்.

சில நிமிடங்கள் கழித்து அடையாறில் ஒரு நவீன வீட்டின் முன் கார் நின்றது.

"இறங்குங்க அம்பிகா. இது என் வீடுதான். உள்ளே போய் பேசலாம்."

அம்பிகா இறங்கினாள். வசந்த் காலிங் பெல்லைத் தொட்டான் சில வினாடிகளில் கதவு திறந்த பெண் நெற்றியில் குங்குமம் ஒளிர்ந்தது.

"வாங்க, உள்ளே வாங்க அம்பிகா. இது



கல்பனா என் வொய்ஃப்" என்றான். அம்பிகாவிற்கு திக்கென்றது.

கைகூப்பி வணக்கம் சொன்ன கல்பனாவுக்கு இயந்திரமாய் கைகூப்பி நின்றாள் அம்பிகா.

"கல்பனா, இது அம்பிகா, என் செகரட்டரி. வாங்க அம்பிகா. மேல போய் பேசலாம்" என்று படிகள் ஏறின வசந்தை ஒன்றும் புரியாமல் தொடர்ந்தாள் அம்பிகா.

"உக்காருங்க அம்பிகா. பதறாம நான் சொல்றதைக் கேளுங்க. நீங்க நினைச்சிட்டிருக்கிற மாதிரி இலக்கியங்களிலே அவ்வளவு கட்டுபாடு உள்ளவன் இல்லை நான். நடிப்பு எல்லாம் நடிப்பு. ரகுவம்சனோட கதைகளை உங்கிட்டே நடக்கிறதுக்காகத் நான் படிச்சேன். எனக்கு கல்யாணமாகி நாலு வருசமாச்சு. முரளி எனக்கு நெருக்கமான ஃப்ரெண்டு. ஆமாம். உங்க முரளிதான். அவனோட ஒரு நாள் பேசிட்டிருந்தப்ப நான் சமீபத்தில மாத்தலாக மெட்ராஸ் ப்ராஞ்ச் வந்திருக்கிறதை சொன்னேன். அடப்பாவி, உன்கிட்டேதான் செகரட்டரியா என் காதலி வேலை பார்க்கறாளான்னு ஆச்சரியப்பட்டு வார்த்தை விட்டுட்டான்."

"அவன் அதுவரைக்கும் தன் காதலைப் பத்தி சொன்னதில்லை. நான் துழவிக் கேட்டதும் சொன்னான். உங்களைப் பத்தி நிறையவே சொன்னான். வருத்தமா சொன்னான். அவன் ஒழுக்கம் எப்படின்னு தெரிஞ்சுக்க, உங்க ஃப்ரெண்டோட கார்ல யாரோ ஒரு பொண்ணை உக்கார வச்சி இவனை 'வர்றியா, சுத்தலாம்'னு கேக்க

வச்சிடெஸ்ட் பண்ணிங்கன்னு சொன்… அந்த கார் நம்பர் வச்சி அப்புறம்… தெரிஞ்சிக்கிட்டானாம். …விஷயத்துக்கப்புறம் 'என் மேல நம்பி… இல்லாம சோதனை செ… பார்த்தானே'ன்னு நொந்து போய்ட்டா…

"அதை அவன் சொன்னப்ப… கேட்டேன். சொந்த அண்ணனையே ச… பேசுற. அதிகமான தன்மானம் பார்க்கற… கோபமுள்ள ஒரு பொண்ணு உன்னை ஆ… நேசிக்கிறதான்னு எப்படி நம்பறே… கேட்டேன். அவ என்னை விரும்பற… மாற்றமெதுவும்இல்லைன்னு வா… செஞ்சான். உன்னைவிட பெட்… ஒருத்தனை பார்த்தா உன்னை க… விட்டுடுவான்னு எனக்குத்தோணுதுன்னே… அவனுக்கு என் மேல கோபமே வந்துடுச்… உடனே நான் 'அவ உன்னை சோதிச்… பார்த்த மாதிரி நீயும் அவளை சோதிச்… பாரேன்னு' சொன்னேன். ஐடியாவும் நானே… கொடுத்தேன். சம்மதிச்சான். அப்புறம் அவனே… ஐடியா கொடுக்க ஆரம்பிச்சான். உங்… ரசனைகள் என்னென்னு அவன் மூலமா… தெரிஞ்சுக்கிட்டு நானும் அந்த ரசனைக… உள்ளவன் மாதிரி நடிச்சேன். எங்… நாடகத்தோட க்ளைமாக்ஸ்தான் நா… உங்களுக்கு எழுதின லெட்டர். அதுதான் உங்… பரிட்சை தான்."

"நான் உங்கட்ட பழகினது வெறும்… ஃப்ரெண்ட்ஷிப்தான். முரளி மேல நான்… வச்சிருக்கிற காதலே தனின்னு நீங்க பதி… சொன்னா இந்த டெஸ்ட்ல பாஸ்னு…



…ணாம். ஸாரி, நீங்க இப்படி ஃபெயில் …காதலை கொச்சைப் படுத்துவீங்கன்னு …ரெண்டு பேருமே எதிர்பார்க்கலை …போங்க, போய் முரளியைப் பாருங்க. …விட்டு மன்னிப்பு கேளுங்க. தப்பும்னா …நாவண்டறது ரொம்ப தப்பு. அதோட …க்கு எல்லையே இருக்காது. முரளியை …பெட்டர்னான்னு என்னை செலக்ட் …ணீங்க. சரின்னு நான் தாலி கட்டேன்னு …அப்புறம் என்னைவிட பெட்டரா …த்தனை சந்திச்சா என்ன செய்வீங்க? …ப்புறம் பண்பாடுக்கு என்ன அர்த்தம்? …க்கு என்ன அர்த்தம்? போய் முரளியை …லே பாருங்க. உங்க மனசோட விளையாடி …காக என்னை மன்னிச்சிடுங்க. ப்ளீஸ்."

அப்படியே உறைந்து போய் நின்று கொண்டிருந்தாள் அம்பிகா.




"நான் இவ்வளவு தூரம் மன்னிப்பு கேட்டும் உங்க மனசு மாறலையா முரளி. என்னை மன்னிச்சி ஏத்துக்க மாட்டீங்களா?" என்றாள் கரகரப்பான குரலில் அம்பிகா.

தன் அறையில் கைகளைக் கட்டிக் கொண்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டு நின்றிருந்த முரளி,

"அம்பிகா, வேணாம், எல்லாம் மறந்து
நானும், நீயும் சந்திக்கவே இல்லை வி
என்னை விட்டுடு. எனக்கு தகுதி
மனைவியா உன்னால இருக்க முடி
ஆனா உனக்கு பொருத்தமான கண
என்னால எப்பவும் இருக்க முடி
வாழ்க்கை பூரா உனக்குள்ள எ
இருந்துட்டே இருக்கும். நீயும் நானும் ஒ
வராத குணச்சித்திரங்கள். நேசிச்சது
நேசிச்சோம். உன்னை சரி செஞ்சிட முடி
நம்பினேன். கடைசிவரைக்கும் நம்பினே
ஏன்னா நீ என்மேல வச்சிருந்த அ
ஆழமானதுன்னு நினைச்சேன். செடி
வேரோட பிடுங்கி போட்டுட்டே. எனக்கு
வச்ச சோதனைல நான் ஜெயிச்சேன். அ
மாதிரி உனக்கு நான் வெச்ச சோதனைல
ஜெயிச்சுடுவேன்னு ரொம்ப எதிர்பார்த்தே
சறுக்கிட்டே. பயங்கரமா தோத்துட்டே. ஸா
நான் வேணாம் உனக்கு. உன் ஃபிரண்டு மூல
நீ சொல்லிவிட்டியே... அப்பவே
நொறுங்கிட்டேன். என் மாமா பொண்ணை
கல்யாணம் செய்துக்க சம்மதம் சொல்லி நா
குறிக்கவே சொல்லிட்டேன். தயவு செஞ்சி
விலகிடு. உன்னை மன்னிக்கிற உரிமை எனக்கு
இல்லை!" என்றான்.

நெடுநேரம் அமைதியாக நின்றிருந்த
அம்பிகா மெதுவாக படிக்கட்டுகளில் இறங்கி
வீட்டை விட்டு வெளியே வந்து நிதானமாக
நடந்தாள் - இலக்கு புரியாமல்.

முற்றும்